ஜூலை - ஆகஸ்டு 2023

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## இயேசுவின் பிரசங்கங்களும் போதனைகளும்

- காற்றினால் அசையும் நாணல்
- நாசரேத்திலிருந்து பாடங்கள்
- இயேசுவின் மலைப் பிரசங்கம்
- கடலின் உவமைகள்
- உண்மையிலேயே நீதிமான் அல்லது வெறுமனே மதவாதி
- அத்திமரம் – கால ஓட்டத்தில் ஒரு நங்கூரம்
- உங்கள் பிரசன்னத்தின் அடையாளங்கள்
- இயேசுவின் பிரயாவிடை சொற்பொழிவு
- செயற்கை நுண்ணறிவு

# இயேசுவின் பிரசங்கங்களும் போதனைகளும்

# ஆதியிலே



நமது கர்த்தரின் பிரசங்கங்களும் பாடங்களும் ஒவ்வொரு புது சிருஷ்டியின் வளர்ச்சிக்கும் முக்கியமான தகவல்களை வழங்குகின்றன. எனவே, அவருடைய போதனைகளை நாம் கற்றுக்கொள்வதும் நினைவில் கொள்வதும் இன்றியமையாதது. இந்த இதழ், அவர் தெரிவித்த சில முக்கியமான பாடங்களின் சுருக்கமான விளக்கத்தை வழங்குகிறது.

**"காற்றினால் அசையும் நாணல்"** என்ற பாடம்,யோவான் ஸ்நானகரின் ஊழியத்தை விவரிக்கிறது. யோவான் காற்றினால் அசைக்கப்படும் நாணல் அல்ல என்று இயேசு சொன்னார். அன்றைய நாட்களில் இருந்த பிற ஆசிரியர்களைப் போல் அல்லாமல், அவருடைய வார்த்தைகள் அர்த்தமுள்ளவையாக இருந்தன.

**"நாசரேத்திலிருந்து வரும் படிப்பினைகள்"** என்ற பாடம், நாசரேத்திலுள்ள ஜெப ஆலயத்தில் இருந்தவர்களுடன் இயேசுவின் உரையாடல்களை விவரிக்கிறது. மக்கள் தான் அற்புதங்களைச் செய்வதைப் பார்க்க விரும்புவதை அறிந்த இயேசு, அதற்குப் பதிலாக, புறஜாதிகளாகிய, ஒரு ஏழை விதவை மற்றும் ஒரு சீரிய படைத்தலைவன் ஆகிய இருவருக்கு செய்யப்பட்ட முந்தைய அற்புதங்களை விவரித்தார். மக்கள் கோபத்துடன் பதிலளித்தனர், அவரைக் கொல்ல முயன்றனர்.

**"இயேசுவின் மலைப் பிரசங்கத்தில்"** தேவனை பிரியப்படுத்தும் குணங்களை விவரிக்கும் ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொண்டார். உலக லட்சியத்தின் ஆபத்துகளையும் இயேசு எடுத்துரைத்தார். தாழ்மையுள்ள மனதுள்ளவர்களுக்கு அவருடைய உபதேசம் ஆறுதலான தைலம் போல இருந்தது. இந்த விலைமதிப்பற்ற பிரசங்கத்தில் அவர் பகிர்ந்துகொண்ட கொள்கைகள் இன்றும் தேவனுடைய ஜனங்களை வழிநடத்துகின்றன.

**"கடலின் அருகில் உரைத்த உவமைகள்** "என்ற பாடம் மத்தேயு 13 இல் உள்ள ஏழு உவமைகளை மதிப்பாய்வு செய்கின்றது. தேவனுடைய வார்த்தைக்காக தாகம் கொண்டவர் யார் என்பதை தீர்மானிக்க இயேசுவின் வார்த்தைகள் ஒரு சோதனையாக இருந்தன. ஒரு தீர்க்கதரிசன பயன்பாடு பரிந்துரைக்கப்பட்டுள்ளது, ஒவ்வொரு உவமையையும் சுவிசேஷ யுகத்தின் தொடர்புடைய ஏழு நிலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"உண்மையிலேயே நீதியுள்ளவர் அல்லது வெளிப்புற மதவாதி" என்ற பாடம் இயேசுவின் நாளின் பல மதத் தலைவர்களின் பாசாங்குத்தனத்தை விவரிக்கிறது, அவர்கள் நீதிமான்கள் என்று கூறிகொண்டு, மனிதர்களின் மரியாதையை மட்டுமே நாடினர். வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் மீது இயேசு ஏழு துன்பங்கள் வரும் என்று கூறினார், அதில் இன்று நமக்கு முக்கியமான ஆவிக்குரிய எச்சரிக்கைகள் உள்ளன.

**"அத்திமரம் - கால ஓட்டத்தில் உள்ள ஒரு நங்கூரம்"** என்ற பாடம், அத்தி மரத்தின் உவமையை ஆராய்கிறது. இஸ்ரயேலின் வளர்ச்சியும் மறுபிறப்பும் தேவனின் திட்டத்தில் நாம் எங்கே இருக்கிறோம் என்பதை வெளிப்படுத்தும் ஒரு குறிகாட்டியாகும். "இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் (கிறிஸ்துவின் இராஜ்யம்) சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்" என்று இயேசு கூறுகிறார். என்ன ஒரு உற்சாகம்

**"உம்முடைய பிரசன்னத்தின் அடையாளங்கள்** "என்ற பாடம் இன்று இயேசுவின் பிரசன்னத்தை வெளிப்படுத்தும் மத்தேயு 24ல் கொடுக்கப்பட்டுள்ள அடையாளங்களை மதிப்பாய்வு செய்கின்றன. அவர் திரும்பி வருவதை உதிக்கும் சூரியனுடன் ஒப்பிட்டார். வாழ்வு தரும் அதன் நன்மைகள் அவரது இராஜ்யத்தின் வேலையுடன் தொடர்புடையது. ஆனால் அதன் முழுப் பலன்களும் உணரப்படுவதற்கு முன், அவற்றைப் பெறுவதற்கு உலகை ஆயத்தம் செய்யும் ஒரு மகா உபத்திரவ காலம் வரும்.

**"இயேசுவின் இறுதி சொற்பொழிவு"** என்ற பாடம், தம்முடைய சீஷர்களுக்கு நமது கர்த்தர் கூறிய கடைசி வார்த்தைகளை மறு பரிசீலனை செய்கிறது, அந்த வார்த்தைகள் அவரது மரணத்தில் வரவிருக்கும் சோத னைக்கு அவர்களை தயார்படுத்துகிறது. "நான் உன்னை நேசித்தது போல" ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும் என்ற அவருடைய புதிய கட்டளை ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு உயர்ந்த தரத்தை அமைத்துள்ளது.

இயேசுவின் ஊழியத்தின் படிப்பி னைகள், தேவன் நம் ஒவ்வொருவரிடமி ருந்தும் என்ன எதிர்பார்க்கிறார் என்பதற்கான சக்திவாய்ந்த நினைப்பூட்டல்கள். நாம் அனைவரும் அவற்றை இருதயத்தில் எடுத்துக் கொள்வோமாக!

## ஜூலை / ஆகஸ்டு 2023, தொகுப்பு 105, எண் 4


**காற்றினால் அசையும் நாணல்** 2
யோவான் ஸ்நானகன்

**நாசரேத்திலிருந்து பாடங்கள்** 6
ஆரம்ப கால அனுபவங்கள்

**இயேசுவின் மலைப் பிரசங்கம்** 13
நியாயப்பிரமாணத்தின் ஆவி

**கடலின் உவமைகள்** 18
பொருள் கொண்ட கதைகள்

**உண்மையிலேயே நீதிமான் அல்லது வெறுமனே மதவாதி** 25
நம்முடைய இலக்கு

**அத்திமரம் - கால ஓட்டத்தில் ஒரு நங்கூரம்** 32
துளிர்த்தல்

**உங்கள் பிரசன்னத்தின் அடையாளங்கள்** 36
இன்று காணக்கூடிய

**இயேசுவின் பிரியாவிடை சொற்பொழிவு** 41
முடிவு பரியந்தம் அவர்களைப் பராமரித்தார்

**செயற்கை நுண்ணறிவு** 47
இன்றைய தீர்க்கதரிசனம்

## யோவான் ஸ்நானகன்
# காற்றினால் அசையும் நாணல்



*Jerry Wesol*

"எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள் ? காற்றினால் அசையும் நாணலையோ ? " (மத்தேயு11:7)

நம்முடைய கர்த்தராகிய இயேசு பிரசங்கித்து கொண்டு, நோயுற்றோரையும், குருடர்களையும், முடவர்களையும் குணப்படுத்தி, மரித்தவர்களை உயிர்த்தெழுப்பினார். இந்த நேரத்தில், யோவான் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது, அவருடைய சீஷர்கள் இயேசுவை சந்தித்தனர். "உண்மையிலேயே நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியா நீர் தானா, அல்லது உம்மை விட பெரியவரை எதிர்பார்க்க வேண்டுமா?" என்று அவர்கள் யோவானின் ஒரு கேள்வியை இயேசுவிடம் கொண்டு வந்தார்கள். (மத்தேயு11:3) இந்த விசாரணையைக் கேட்ட திரளான ஜனங்கள், இந்தக் கேள்வி விசுவாச குறைவை காட்டுகிறதா என்று வியந்திருக்கலாம். தாங்கள் பார்த்ததையும் கேட்டதையும் யோவானிடம் சொல்லும்படி இயேசு யோவானின் சீஷர்களிடம் அறிவுறுத்தினார். "என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்" (மத்தேயு11:6) நிச்சயமாக, இது யோவானுக்கு ஊக்கமளித்திருக்கும்.

யோவானின் சீஷர்கள் வெளியேறிய பிறகு, யூத ஜனங்கள் மேசியாவைப் பெறுவதற்கான ஆயத்தத்தைப் பற்றிய யோவானின் முக்கியத்துவத்தையும் உண்மைத்தன்மையையும் குறித்து பேச, அவர் திரளான ஜனங்களை நோக்கி, தனது கவனத்தைத் திருப்பினார், " எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள் ?காற்றினால் அசையும் நாணலையோ ? அல்லவென்றால், எதைப் பார்க்கப்போனீர்கள் ? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ ? மெல்லிய வஸ்திரந்தரித்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள். அல்லவென்றால், எதைப் பார்க்கப்போனீர்கள் ? தீர்க்கதரிசியையோ ? ஆம், தீர்க்கதரிசியைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்



Jesus, addressing the crowds

அதெப்படியெனில் இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன், அவன் உமக்கு முன்னே போய் வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன்தான்" (மத்தேயு11:810, ஏசாயா40:3, மல்கியா3:1,4:5)

### இயேசுவின் கேள்வி

சந்தேகத்திற்கு இடமின்றி இயேசு அவர்களின் எண்ணங்களைப் படித்து அவர்கள் ஏன் யோவானைப் பார்க்கவும் கேட்கவும் சென்றார்கள் என்று கேட்டார். அவர் பலவீனமானவர் என்றும், காற்றில் புல்லைப் போல அலைக்கழிக்கப்படுகிறார் என்றும் அவர்கள் நினைத்ததாலா ? கோட்பாட்டின் ஒவ்வொரு காற்றினாலும் அசைக்கப்படாமல் உறுதியாக நிற்க வேண்டும் என்று அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார். (எபேசியர் 4:14) புல்லைப்போல, ஒவ்வொரு விருப்பத்திற்கும் அல்லது ஒவ்வொரு புதிய கோட்பாட்டிற்கும் தனது மனதை மாற்றும் அவர்களின் செய்தியில் பலவீனமான அர்ப்பணிப்பு உள்ள ஒருவரை அவர்கள் கேட்கச் சென்றார்களா? என்று இயேசு கேட்டாரா அதற்கு பதிலாக, கர்த்தருடைய ஊழியராக இருந்த யோவானின் மகத்துவத்தைக் காட்டுவதற்கு இயேசு ஒரு கட்டமைப்பை அமைத்தார்.

யோவான் விசுவாசம் நிறைந்தவராகவும், அவருடைய ஊழியப் பணியில் ஆழ்ந்த ஈடுபாட்டுடனும் இருந்தார். இயேசு எப்போது தனது இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று யோவானின் சிறையிருப்பின்



*John, baptizing Jesus*

சூழ்நிலைகள் அவரை யோசிக்கச் செய்திருக்கலாம். தாமதமானது, இயேசுவே மேசியாவா என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கலாம். ஆனால் யோவான் புத்திசாலித்தனமாக இயேசுவிடன் நேரடியாக இதை கேட்டார். இயேசுவின் ஊழியத்தில் அவர்கள் கேட்டதையும் பார்த்ததையும் யோவானிடம் பகிர்ந்துகொள்ளும்படி யோவானின் சீஷர்களிடம் இயேசு சொன்னார். இந்த சான்று பெரிய தீர்க்கதரிசியின் மனதை எளிதாக்கும். விசுவாச குடும்பத்தைச் சேர்ந்த நாமும் சில கேள்விகள் அல்லது சந்தேகங்களால் குழப்பமைடையும் போது இதைத்தான் செய்ய வேண்டும். "தேவனுடைய எல்லா ஊழியர்களும் குழப்பமடையும் போது, சந்தேகத்தோடு அல்ல மாறாக விசாரிப்பதற்கு, யோவான் பின்பற்றின சரியான போக்கை, நாம் பின்பற்றும்போது, அவருடைய வார்த்தையால் இளைப்பாறுதல் அடையலாம்." என்று சகோதரர் ரசல் எழுதுகிறார். "நம்முடைய சொந்தக் காதுகளால் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்க முடியாமல் போகலாம், ஆனால் யோவானைப் போலவே நாமும் அதைப் பெறலாம் - அப்போஸ்தலர்கள் மற்றும்

தீர்க்கதரிசிகளின் சாட்சியங்கள் மூலம், சரியான கேள்விகளுக்கு தேவன் முன்கூட்டியே பதில்களை அளித்துள்ளார்." (Reprint 2621)

ஆடம்பரமான ஆடைகளை அணிந்த ஒருவரைத் தேடி வனாந்தரத்திற்குச் சென்றீர்களா என்று இயேசு ஜனங்களிடம் கேட்டார். யோவானின் செய்தியைக் கேட்டு, அதை நம்பியவர்கள், தேவனுடைய தீர்க்கதரிசி ஆடம்பரமான எதையும் அணிந்திருப்பதை ஒருபோதும் எதிர்பார்க்க மாட்டார்கள். ஒரு உண்மையான தீர்க்கதரிசி இதுபோன்ற விஷயங்களால் பாதிக்கப்படுவதில்லை. உண்மையில், யோவான் தாமே கரடுமுரடான மற்றும் ரோமமுள்ள ஆடைகளை அணிந்திருந்தார். இவை முற்காலத்தில் தீர்க்கதரிசியாகிய எலியா அணிந்திருந்த குறிப்பிட்ட ஆடைகள். (2இராஜாக்கள் 1:8, மத்தேயு 3:4)

**மனந்திரும்புதலைப் பிரசங்கித்தல்**

யோவான் மனந்திரும்புதலைக் குறித்து பிரசங்கித்தார் மேலும், இஸ்ரயேலரின் இருதயங்கள் மேசியாவை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தப் படுத்துபவர் என்று ஏசாயா தீர்க்கதரிசியால் முன்னுரைக்கப்பட்டவர் இவரே. (ஏசாயா40:3, மல்கியா3:1) யோவான் பிறப்பதற்கு முன், அவர் வலிமையான குணம் கொண்டவராக இருப்பார் என்றும், பல இருதங்களை தேவனிடம் திருப்புவார் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

"தூதன் அவனை நோக்கி - சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது, உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக.உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும், அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள். அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பட்டிருப்பான். "அவன் இஸ்ரயேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான். பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத் திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான்" (லூக்கா 1:1317) என்று,

காபிரியேல் யோவானின் தந்தை சகரியாவிடம் அறிவித்தார். யோவானின் வாழ்க்கை முறை எளிமையானதும், ஒதுக்கப்பட்டதும், மது அருந்தாமல், கட்டுப்பாடுள்ளதுமாக இருந்தது. அவர் வெட்டுக்கிளிகளையும் காட்டுத் தேனையும் சாப்பிட்டார். (மத்தேயு3:4) அவர் தன்னை ஒரு பிரபுவாகவோ அல்லது இராஜாவாகவோ தன்னை நினைக்கவில்லை. அவர் எந்த அரண்மனையிலும் வசிக்கவில்லை. ஆனால் ஒரு நிலவறையில் தனது வாழ்க்கையை முடித்தார். அவருடைய பிரசங்கம் எலியாவைப் போல மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. பலர் செய்தியைக் கேட்டு, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றார்கள். (மத்தேயு 3:26, அப்போஸ்தலர் 19:45) யோவானின் பிரசங்கத்தால் ஜனங்கள் தாழ்மையடைந்தனர், மனந்திரும்பு வதற்கும் ஞானஸ்நானம் பெறுவதற்கும் வழிவகுத்தனர்.

**பெரியவர் ஒருவரும் இல்லை**

இறுதியாக, யோவான் ஒரு தீர்க்கதரிசி மட்டுமல்ல, அவர் எல்லா தீர்க்கதரிசிகளிலும் மிகப் பெரியவர் என்று அவிசுவாசியான பரிசேயர்கள் உட்பட அங்கிருந்த பார்வையாளர்கள் அனைவருக்கும் இயேசு சொன்னார். "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை, ஆகிலும், பரலோக இராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்." (மத்தேயு11:11) யோவான் தீர்க்கதரிசிகளில் கடைசியானவரும், "பணிவிடைக்காரருடைய வீட்டில்" கடைசியானவருமாக இருந்தார். இரட்சகரைக் குறித்து அறிவிக்கும் மரியாதைக்குரிய பாக்கியம் அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டது, மேலும் அவர் தனது கடமையை கண்ணியத்துடனும் ஆர்வத்துடனும் செய்தார். எந்த தீர்க்கதரிசிகளும் அவருக்கு மேலானவர்கள் அல்ல. (R4543:1, R4958:1, OV199:1)

யோவான் இப்படிப்பட்ட முயற்சிகள் செய்த போதிலும், இந்த சுவிசேஷ யுகத்தில் வழங்கப்படும் ஆவிக்குரிய வெகுமதியில் அவருக்கு பங்கு இருக்காது. அவர் மணவாளனின் தோழனாக இருப்பதில் திருப்தி அடைந்து, "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி..." என்று சொல்லி அவருடைய முதலாம் வருகையை அறிவித்தார். (யோவான் 1:29)பரலோக வாசிகளாகவும், கிறிஸ்துவின் மணவாட்டியாகவும், மகத்தான மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தின் ஒரு பகுதியாக இருப்பதற்கு நாம் பெற்ற கிருபையான வாய்ப்பை எண்ணி நாம் அதிகமாக பாராட்ட வேண்டும்.

இந்த யுகத்தின் உயர்ந்த அழைப்பில் பங்குகொள்பவர்கள் அதன் சலுகைகள் மற்றும் வாய்ப்புகளை மதிப்பதோடு, "நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிசெய்ய" முயல வேண்டும். (2பேதுரு1:411) "பணிவிடைக்காரரின் வீட்டின்" உறுப்பினர்களாக இருக்க பூமிக்குரிய அழைப்பிற்கு அழைக்கப்பட்டவர்கள், யோவான் ஸ்நானகன் செய்தது போல், அத்தகைய விசுவாசத்துடனும் வைராக்கியத்துடனும் தங்கள் நியாயமான ஊழியத்தைச் செய்தார்கள் என்றால், அதிகமான அனுகூலத்தைப் பெற்றவர்களை நாம் எவ்வளவு அதிகமாக முயற்சி செய்யவேண்டும் ? "" (2பேதுரு3:11) இராஜ்யத்தில் நம்முடைய ஆண்டவரோடு பங்காளிகளுக்கான இந்த உயர்ந்த அழைப்பு மிகவும் சிறப்பு வாய்ந்ததும், வரையறுக்கப்பட்ட அழைப்புமாகும்.

இது விரைவில் முடிவடையும். திரும்ப இந்த அழைப்பு ஒருபோதும் கொடுக்கப்படாது. இந்த விஷயங்களையும் கருத்தில் கொண்டு, பாரமான எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்து, விசுவாசத்தை முடிக்கிறவராகிய இயேசுவை நோக்கி, சுவிசேஷ யுகத்தில் நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் பொறுமையுடன் ஓடுவோம். (எபிரெயர் 12:1, R262)

### ஆரம்ப கால அனுபவங்கள்

# நாசரேத்திலிருந்து பாடங்கள்



**_Tom Ruggirello_**

"அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு - இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா என்றார்கள்." (லூக்கா 4:22)

இயேசு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்ற பின், அவர் ஆவியினால் யூதேயா வனாந்தரத்திற்கு வழிநடத்தப்பட்டார். அங்கு அவர் 40 நாட்கள் இரவும், பகலும் தனது தந்தையிடம் ஜெபித்து, வரவிருக்கும் பெரிய வேலைகளைக் குறித்து சிந்தித்தார். எதிராளியின் சோதனைகளை ஞானமாக கையாண்டு, கலிலேயாவுக்குப் புறப்பட்டு, ஜெப ஆலயங்களில் பிரசங்கிக்க தொடங்கினார்.

அவர் கற்பிக்க துவங்கியபோது அவரது புகழ் பரவத் தொடங்கியது. அவர் நாசரேத்துக்குத் திரும்பியபோது, ஓய்வு நாளில் ஜெப ஆலயத்திற்குச் சென்றார், அங்கு வாசிக்க ஒரு சுருள் கொடுக்கப்பட்டது. அவர் அந்த சுருளைத் திறந்து வாசித்ததாவது - "கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார், தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார், இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும் நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்....." (லூக்கா4:18,19)

பணிவிடைக்காரரிடம் சுருளைத் திருப்பிக் கொடுத்த பிறகு, எல்லாக் கண்களும் அவர் மீது பதிந்தது. அப்போது "உங்கள் காதுகள் கேட்க இந்த வேத வாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று ..." என்று இயேசு கூறினார். ஆரம்பத்தில் ஜனங்களின் பதில் சாதகமாகவே இருந்தது. அவர்கள் அவரைப் பற்றி நன்றாகப் பேசினார்கள், அவருடைய வார்த்தைகளைக் கண்டு வியந்தார்கள். (22ம் வசனம்) "இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா என்றார்கள்."

அதற்கு இயேசு அவர்களை நோக்கி, "வைத்தியனே, உன்னைத்தானே குணமாக்கிக் கொள் என்கிற பழமொழியைச் சொல்லி, நாங்கள் கேள்விப்பட்டபடி கப்பர்நகூமில் உன்னால் செய்யப்பட்ட கிரியைகள் எவைகளோ அவைகளை உன் ஊராகிய இவ்விடத்திலும் செய் என்று நீங்கள் என்னுடனே சொல்லுவீர்கள் என்பது நிச்சயம்." என்றார். (வசனம் 23)



*Jesus, reading Isaiah at Nazareth*



*Elijah visiting the Widow of Zarephath*

இயேசு நாசரேத்தில் வளர்க்கப்பட்டார். அவரை அறிந்தவர்களின் ஆரம்பத்தில் அவருக்கு நற்சாட்சி கொடுத்தார்கள். ஆனால் இயேசுவின் பதில் விரோதமாகத் தோன்றியது. "வைத்தியரே, உங்களை நீங்களே குணப்படுத்துங்கள்" என்ற சொற்றொடர் ஒரு யூத பழமொழி. இயேசு அவர்களுக்காக அற்புதங்களைச் செய்ய வேண்டும் என்று அவர்களின் விருப்பத்தை அவர் கூறினார். வேறு வார்த்தைகளில் கூறவதானால், மருத்துவரே, உங்கள் சொந்த ஜனங்களை குணப்படுத்துங்கள். எங்களுக்காக நல்ல காரியங்களைச் செய்யுங்கள் என்று பொருள்படும்.

### இஸ்ரயேலில் பல விதவைகள்

"அன்றியும் எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபோது, இஸ்ரயேலுக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள். ஆயினும் எலியா சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பபட்டானெயல்லாமல் மற்றொருத்தியினிடத்திற்கும் அனுப்பப்படவில்லை. அல்லாமலும் எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரயேலருக்குள்ளே அநேக குஷ்டரோகிகள் இருந்தார்கள், ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை என்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (வசனங்கள் 25-27)என்று இயேசு தொடர்ந்தார்.

"ஜெப ஆலயத்திலிருந்து எல்லாரும் இவைகளைக் கேட்டபொழுது கோபமூண்டு, எழுந்திருந்து, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலை கீழாய்த் தள்ளிவிடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டுபோனார்கள். அவரோ அவர்கள் நடுவினின்று கடந்துபோய்விட்டார்." (வசனங்கள் 28-30)

குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் ஏன் ஆண்டவரின் ஆசீர்வாதம் கிடைத்தது என்பதை விளக்குவதற்கு எலியா மற்றும் எலிசாவின் குறிப்பிட்ட உதாரணங்களை இயேசு தேர்ந்தெடுத்தார். இயேசு பகிர்ந்துகொண்ட இரண்டு உதாரணங்களும் புறஜாதிகளைப் பற்றியவை. அந்த விதவை பினிக்கேயாவை தலைநகரமாக கொண்ட சீதோன் நாட்டைச் சேர்ந்தவள். அங்கு நாகமான் ஒரு சீரிய தளபதியாக இருந்தார்.

### சாறிபாத்தின் விதவை

எலியா தீர்க்கதரிசி உண்மையில் ஒரு ஏழை விதவைக்கு இரண்டு தனித்தனி அற்புதங்களைச் செய்தார். (1இராஜாக்கள் 17:8-16) சாறிபாத்தில் எலியாவுக்கு உணவளிக்கக்கூடிய ஒரு விதவையை கண்டுபிடிக்கும்படி தேவன் எலியாவிடம் கூறினார். அவர் சாறிபாத்திற்கு வந்தபோது, ஒரு விதவை விறகுப் பொறுக்கிக்கொண்டிருந்ததை கண்டு அவளிடம் குடிக்க தண்ணீர் கேட்டார். பின்னர் புசிக்க "ஒரு அப்பமும்" கேட்டார்.

ஆனால் அந்தப் பெண் கடைசியாக ஒரு பிடி மாவும் மற்றும் அதை சுடுவதற்கு கொஞ்சம்



*Naaman the Syrian, cleansed in the Jordan*

எண்ணையும் மட்டுமே வைத்திருந்தாள். இறப்பதற்கு முன் தனக்கும் தன் குமாரனுக்கும் இறுதி உணவைத் தயாரித்துக் கொண்டிருந்தாள். மாவும் எண்ணெயும் தீராது என்று எலியா உறுதியளித்து, அவருக்கு முதலில் ஒரு அப்பம் சுடும்படி அவளை ஊக்குவித்தார்.

பல பெண்களுக்கு, எலியாவின் வேண்டுகோள் அவர்களின் தாய்மை உள்ளுணர்வுடன் முரண்படலாம். ஏன் இப்படிப்பட்ட சூழ்நிலையில் யாரெனும் ஒரு அந்நியரை நம்பி அவருடைய வேண்டுகோளுக்கு கீழ்ப்படிவார்களா? ஆனால் இந்த ஏழை விதவை சம்மதித்து உணவை ஆயத்தம் செய்தாள். "அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள், அவளும், இவனும் அவள் வீட்டாரும் அநேக நாள் சாப்பிட்டார்கள்." என்று பதிவுகள் கூறுகிறது. (1இராஜாக்கள் 17:15) அவளுடைய விசுவாசத்தால் பயனடைந்த மற்றவர்களும், எலியாவின் அற்புதத்தால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக அவளுடைய வீட்டில் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஏழையான புறஜாதி விதவை தேவனுடைய தீர்க்கதரிசியின் மேல் விசுவாசம் வைத்து, அவருடைய அறிவுரைகளைப் பின்பற்றிய பிறகுதான் அங்கு முதல் அற்புதம் செய்யப்பட்டது. இயேசுவின் வல்லமைக்கு காணக்கூடிய ஆதாரங்களை விரும்பிய நாசரேத் ஜனங்கள் மத்தியில் இயேசு இவ்வளவு எளிமையான விசுவாசத்தை காணவில்லை.

## மிக பெரிதான ஓர் அற்புதம்

மிக பெரிய ஒரு அதிசயம் வருவதற்கு முன் எலியாவின் அற்புதம் ஒரு முன்னோடியாக இருந்தது. சிறிது நேரத்திற்கு பின், அந்த பெண்ணின் மகன் மரித்தான். "அப்பொழுது அவள் எலியாவை நோக்கி - தேவனுடைய மனுஷனே, எனக்கும் உமக்கும் என்ன? என் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணவும், என் குமாரனைச் சாகப்பண்ணவுமா என்னிடத்தில் வந்தீர்? என்றாள்." (1இராஜாக்கள் 17:18) கடந்த காலத்தை நினைவு கூர்ந்து அவள், தனது மகனின் மரணத்தை தேவனுடைய தண்டனையாகக் கருதினாள். ஆனால் ஒரு குறிப்பிடத்தக்க காட்சி தொடர்ந்தது.

மரித்து போன சிறுவனை அவனது தாயின் கைகளில் இருந்து எடுத்து, எலியா தன் அறையில் உள்ள தனது படுக்கையில் கிடத்தினார். அதன் பின், "அந்தப் பிள்ளையின்மேல் மூன்று தரம் குப்புறவிழுந்து

- என் தேவனாகிய கர்த்தாவே, இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பிவரப்பண்ணும் என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான்." (21ம் வசனம்) இதனால் சிறுவன் உயிர் பெற்றான். காத்திருந்த தாயிடம் எலியா அவனைத் தூக்கிக்கொண்டு வந்து ஒப்படைத்தார்.

மரித்தோரிலிருந்து ஒருவர் உயிர்த்தெழுப்பப் படுவதைப் பற்றிய வேதாகமத்தில் முதல் குறிப்பு இதுவே. இது அரச அதிகாரிகளுக்காகவோ அல்லது பணம் படைத்தவர்கள் ஒருவருக்கோ செய்யப்பட வில்லை. மாறாக, முன்பு தனது சிறிய மகனுடன் இறக்கத் தயாராக இருந்த ஒரு ஆதரவற்ற விதவைக்காக நிகழ்த்தப்பட்டது, அவள் உலகத் தரங்களால் அங்கீகரிக்கப்படாதவளும், சமூகத்தின் விளிம்பில் வாழ்ந்தவளுமாக இருந்தாள். ஆனால் தேவன் அவளுடைய இருதயத்தைப் படித்து அவளுடைய நம்பிக்கைக்கு வெகுமதி அளித்தார். இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அவளுடைய அவநம்பிக்கை, தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற அவளை தயார்படுத்தியது.

## எலியா மற்றும் எலிசா - ஒரு நிழல்

எலியாவைப் பற்றிய முதல் குறிப்பு 32 வருட வறட்சியின் தொடக்கத்தில் காணப்படுகிறது. அந்த ஆறு வறண்டு போகும் வரை அவர் காகங்களால் போஷிக்கப்பட்டார். அதன் பின் சீதோனுக்குச் செல்லும்படி தேவன் எலியாவிடம் சொன்னார், அங்கு அவர் அந்தப் பெண்ணைச் சந்தித்தார். அவளுடன் எலியாவின் அனுபவங்கள் சுவிசேஷ யுகத்தின் ஆவிக்குரிய வறட்சியை அடையாளப்படுத்தலாம். போப் அமைப்பின் ஆதிக்கத்தில், ஆவிக்குரிய வறட்சியின் போது விசுவாசமுள்ளவர்கள், நிலைத்திருப்பார்கள் என்று இந்த அற்புதம் தெரிவிக்கிறது.

அவருடைய ஊழியத்தின் முடிவில், எலியா எலிசாவிடமிருந்து அக்கினி இரதத்தால் பிரிக்கப்பட்டு, ஒரு சூழற்காற்றில் எடுத்துக் கொள்ளப்பட்டார். (2இராஜாக்கள் 2:11) பின்பு எலிசா எலியாவின் சால்வையை எடுத்து, அவருக்கு பதிலாக தேவனுடைய தீர்க்கதரிசியானார். அதற்கு பின் யோர்தான் நதியை அடித்தார், அது பிரிந்து யோர்தான் நதியின் மேற்குப் பக்கத்தைக் கடக்க அனுமதித்தது. அங்கு அவர் ஊழியம் செய்யும்போது, 13 கூடுதலான அற்புதங்களைச் செய்தார். தேவனுடைய பூமிக்குரிய பிரதிநிதிகளின் அதிகாரங்களை அவர்கள் பெற்றிருப்பதால், எலிசா முற்பிதாக்களை அடையாளப்படுத்தலாம் என்று அவருடைய முன்னோடியுடன் தொடர்பு தெரிவிக்கிறது. யோர்தானுக்கு மேற்கில் செய்யப்பட்ட அவரது அற்புதங்கள் பூமிக்குரிய இராஜ்யத்தின் பிரபுக்களாகிய முற்பிதாக்களின் வேலையைக் குறிக்கிறன்றது. எலியா வகுப்பு காட்சியிலிருந்து விலகிய பிறகு அவர்கள் தேவனுடைய அதிகாரத்தைப் பெறுவார்கள்.



*Jesus at the cliff in Nazareth*

இந்த இரண்டு தீர்க்கதரிசிகளும் இரட்சிப்பின் இரண்டு யுகங்களை அடையாளப் படுத்துகிறார்கள். மேலும் இயேசு அவர்களை உதாரணங்களாகத் தேர்ந்தெடுத்ததற்கு இதுவே காரணமாக இருக்கலாம். முதலில், தேவனுடைய ஆசீர்வாதங்களின் பலன்களைப் பெறுபவர்களுக்குத் தேவையான இருதய நிலையை அவர் விளக்க விரும்பினார். ஆனால் தற்போதைய சுவிசேஷ யுகம் மற்றும் பூமிக்குரிய இராஜ்யம் ஆகிய இரண்டு யுகங்களில் தேவனுடைய ஆசீர்வாதங்களும் குணப்படுத்தும் வல்லமையும் ஊற்றப்படும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

## ஒரு சிலுவையில் உருவம்

அதே போன்ற ஒரு சிறுவனை எலிசாவால் உயிரோடு எழுப்பப்பட்ட ஒரு அற்புதத்தை 2இராஜாக்கள் 4:34, 35 விவரிக்கிறது. "கிட்டேபோய், தன் வாய் பிள்ளையின் வாயின்மேலும், தன் கண்கள் அவன் கண்களின்மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின் மேலும் படும்படியாக அவன்மேல் குப்புறப்படுத்துக் கொண்டான், அப்பொழுது பிள்ளையின் உடல் அனல் கொண்டது."

எலிசா சிறுவன் மீது அதே செயலை மீண்டும் செய்தார். எலிசாவின் முதல் செயலில் அந்த சிறுவன் சூடாகி, பின்னர் ஏழு முறை தும்மினான், இரண்டாவதாக அவன் எழுந்தான். அவர் படிப்படியாக உயிர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. சிறுவன் மேல் படுத்து, அவனுடைய கண்களுக்கு மேல் கண்களையும், வாயின் மேல் வாயையும், கைகளின் மேல் கைகளையும் வைத்தால், சிலுவையில் கைகளை நீட்டியபடி இருக்கும் இயேசுவின் உருவம் நினைவுக்கு வருகிறது. இதை அடையாளமாக எடுத்துக் கொண்டால், இயேசு சிலுவையில் மரித்ததன் விளைவாக மனுக்குலம் உயிர்த்தெழும் என்பதை இது குறிக்கிறது. (ஏசாயா 53:4,5) முற்பிதாக்களின் போதனையால் இஸ்ரயேல் எவ்வாறு புத்துயிர் பெறுவார்கள் என்பதையும் இது நிரூபிக்கிறது. (எசேக்கியேல் 37:12-14, சகரியா 12:10 காண்க)

இரண்டு படிநிலைகளில் மீண்டும் அந்த சிறவனை ஜீவனுக்கு கொண்டுவரும் செயலானது இராஜ்யத்தில் ஜீவன் படிப்படியாக மறு சீரமைக்கப்படும் என்பதை குறிக்கிறது. முன்பு கொண்டிருந்த அதே பாவச் சிந்தையுடன் ஜனங்கள் கல்லறையிலிருந்து எழுப்பப்படுவார்கள். அவர்கள் தேவனுக்குப் பிரியமான பாத்திரங்களாக மாறும் போது, ஆயிர வருடத்தின் முடிவில் அவர்களுக்கு நித்திய ஜீவன் வழங்கப்படும்.

## சீரியனாகிய நாகமான்

தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு இயேசு நாகாமானை இரண்டாவது உதாரணமாக தேர்ந்தெடுத்தார். நாகமான் ஒரு ஏழையோ அல்லது விதவையைப் போல சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர் அல்ல. அவர் ஒரு பிரபலமான தளபதி, உயர்ந்த மரியாதை மற்றும் பதவியில் இருந்தவர். இருப்பினும், ஒரு புறஜாதியாக இருந்ததைத் தவிர, மற்றொரு காரணத்திற்காக இயேசு அவரை உதாரணமாகப் பயன்படுத்தினார்.

நாகமான் குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்ட ஒரு மரியாதைக்குரிய மனிதர். (2இராஜாக்கள் 5:1) அவரை பலவீனப்படுத்தும் இந்த நோயால் அவதிப்படுவதைப் பார்த்த ஒரு சிறுமி, (வேலைக்காரி) சமாரியாவிலுள்ள ஒரு தீர்க்கதரிசி அவரை குணமாக்குவார் என்று கூறினாள். (வசனம் 3) அந்த சிறுமி சந்தேகத்திற்கு இடமின்றி நாகாமானை ஒரு நல்ல மனிதராகப் பாராட்டியதால் அவருக்கு உதவி செய்ய விரும்பினாள்.

நாகாமானுக்கு நல்ல இருதயம் இருந்தபோதிலும், அவர் ஒரு அளவுக்கு பெருமையுள்ளவராக இருந்தார். அவர் சமாரியாவுக்கு வந்தபோது, எலிசா தீர்க்கதரிசி அவரைப் பார்க்க மறுத்துவிட்டார். அதற்கு பதிலாக, நாகாமான் யோர்தான் நதியில் ஏழு முறை கழுவ வேண்டும் என்று எலிசா அவருக்கு அறிவுறுத்தினார். (H7364) ஆரம்பத்தில், நாகமான் அவமதிக்கப்பட்டதால், அவர் முதலில் கீழ்ப்படிய மறுத்தார். ஆனால் அவருடைய ஊழியர்கள் அவருக்கு ஞானமான ஆலோசனையை வழங்கினார்கள். தீர்க்கதரிசி ஏதாவது ஒரு "பெரிய காரியத்தை" செய்ய சொல்லியிருந்தால், நாகாமான் இணங்கியிருப்பார் என்று அவர்கள் பரிந்துரைத்தனர். இந்த எளிய அறிவுரைகள் அவருடைய கொடூரமான நோயைக் குணப்படுத்த முடிந்தால், அதற்கு கீழ்ப்படிவது நியாயமானதாக இருந்தது. (2இராஜாக்கள் 5: 13) இதனால் நாகமான் இறுதியாக ஒப்புக்கொண்டார். பின்னர் அவர் ஏழு முறை யோர்தானில் முழுகினார், (H2881) ஏழாவது முறை அவர் முழுகி எழுந்தபோது அவருடைய தோல் "சிறு குழந்தையின் சதையைப் போல்" ஆனது.

எலிசா நாகமானிடம் ஏழு முறை ஸ்நானம் பண்ணும்படி அறிவுறுத்தியிருந்தார், ஆனால் நாகாமான் ஏழு முறை முழ்கினார். இந்த வார்த்தைகளில் உள்ள வித்தியாசம் சுவாரஸ்யமானது. மேலும் எலிசாவின் அறிவுறுத்தல் அவரை குணப்படுத்த முடியுமா என்று அவர் சந்தேகம் கொண்டிருந்தார் என்பதைக் குறிக்கலாம்.

**தீர்க்கதரிசனமான இராஜ்யத்தின் வேலைகள்**

இந்த அற்புதம் யோர்தான் நதியில் நிகழ்ந்த காரியம் குறிப்பிடத்தக்கது. இங்குதான் இயேசுவும் தன்னை அர்ப்பணித்தார். இப்போது, ஒரு புறஜாதி பிரபு, குஷ்டரோகத்திலிருந்து குணமடைவதற்கு முன்பு அதில் ஸ்நானம் பண்ணவேண்டியதாக இருந்தது. இந்த நாகமான் புறஜாதி நாடுகளை அடையாளப்படுத்தலாம். அவர்கள் பாவத்திலிருந்தும், அதன் விளைவுகளில் இருந்தும் பூரணமாக குணமடைவதும், அவர்கள் தங்களை தேவனுக்கு அர்ப்பணித்த பின்னரே ஏற்படும்.

நாகமானைப் போலவே, பலருக்கு ஆரம்பத்தில் சந்தேகங்கள் இருக்கலாம். சிலர் கீழ்ப்படிதலின் வழியாகவே இதன் வழி செல்வார். ஆனால் இராஜ்யம் முன்னேறும் போது, அதன் உண்மையான நன்மையை ஜனங்கள் புரிந்துகொள்ளத் தொடங்கும் போது, அவர்கள் தங்களை முழுமையாக தேவனுக்கு அர்ப்பணிப பார்கள், மேலும் அவர்கள் பாவத்திலிருந்து தூய்மைப்படுத்துவார்கள்.

நாகமான் ஒரு நல்ல மற்றும் மரியாதைக்குரிய நபர். இன்னும், அவர் மேற்கொள்ள வேண்டிய பெருமை அவருக்குள் இருந்தது. இந்த உலகம் பல உன்னதமான மனிதர்களால் நிரம்பியுள்ளது, ஆனால் அவர்களுக்கும் மேற்கொள்வதற்கு அநேக தடைகள் உள்ளது. சரியான வழிகாட்டுதலினால் மற்றும் அவர்களின் மிகுதியான தேவையினால், தங்கள் எல்லா சவால்களையும் சமாளித்து முழுமையாக ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

இயேசு எலியா மற்றும் எலிசாவின் அற்புதங்களை குணப்படுத்துவதற்கான எடுத்துக்காட்டுகளாகத் தேர்ந்தெடுத்தபோது, இரண்டு தீர்க்கதரிசிகளால் சித்தரிக்கப்பட்டுள்ள இரண்டு சிறப்பு வகுப்புகள் மூலம் வரவிருக்கும் இரட்சிப்பின் பெரிய வேலையை முன்னறிவிப்பதற்காக இவைகள் நிகழ்த்தப்பட்டது. இஸ்ரயேலின் மற்ற எந்த தீர்க்கதரிசியையும் விட அவர்களின் ஒருங்கிணைந்த ஊழியங்கள் அதிக அற்புதங்களைச் செய்தது.

### நாசரேத் ஜனங்கள் பதிலளித்தனர்

இந்த இரண்டு சுகப்படுத்துதலைப் பற்றி கேள்விப்பட்டவுடன், நாசரேத்தில் உள்ள ஜனங்கள் கொதிப்படைந்தனர். சில நிமிடங்களுக்கு முன்பு அவர்கள் அவருடைய கிருபையான வார்த்தைகளைக் கண்டு வியந்தனர், ஆனால் இப்போது, அவர்கள் "கோபத்தால் நிரப்பப்பட்டனர். அவர்கள் இயேசுவை நகரத்திற்கு வெளியே தள்ளிவிட்டு, அவரை ஒரு மலையின் உச்சியிலிருந்து கீழே தள்ளத் தயாரானார்கள். (லூக்கா4:28-30) பட்டினியால் வாடும் ஒரு ஏழை விதவைக்கும் அவளுடைய மகனுக்கும், குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்ட ஒரு மனுஷனுக்கும் செய்யப்பட்ட அற்புதத்தைப் பாராட்டுவதற்குப் பதிலாக, அவர்கள் புறஜாதிகள் என்று மட்டுமே பார்த்தார்கள்.

யூதர்களாக, அவர்கள் அவமதிக்கப்பட்டனர் மற்றும் இயேசு அந்த நாளில் எந்த அற்புதத்தையும் செய்யப் போவதில்லை என்பதை உணர்ந்தனர். ஆனாலும் இயேசு அவர்களுடைய தீய நோக்கததை தவிர்த்துவிட்டு, "அவர்கள் நடுவே கடந்து சென்றார்" (வசனம் 30)

### ஆசீர்வாதங்களுக்கு ஒரு தடை

நாசரேத்து ஜனங்களுக்கு நம்முடைய கர்த்தரின் வார்த்தைகள் ஆரம்பத்தில் கடுமையாகத் தோன்றலாம். இருப்பினும், அவர்களின் எதிர்வினை அவர் அவர்களின் இருதயங்களை சரியாகப் படித்து விட்டார் என்பதை நிரூபித்தது. பெருமை தேவன் வெறுக்கும் ஒரு குணம். (நீதிமொழிகள் 6:17) இது அவருடைய ஆசீர்வாதங்களுக்கு ஒரு தடையாக செயல்படுகிறது. தேவனுடன் ஒரு உறவை வைத்திருக்க விரும்பும் எவரும் பெருமையின் பலவீனமான விளைவுகளை புரிந்து கொள்ள வேண்டும். சில சமயங்களில் நம்முடைய குணாதிசயங்களில் உள்ள சில குறைகளையும், நம்மிடம் இல்லாத சில நல்ல குணங்களையும் தேவன் சுட்டிக் காட்டும் போது, நம்முடைய பெருமையின் உணர்வு காயப்படலாம். ஆனால் நாசரேத் ஜனங்களை போல, கண்மூடித்தனமான பெருமை, ஆண்டவர் கற்பிக்கும் எந்தப் பாடத்தையும் ஏற்றுக்கொள்வதைத் தடுத்துவிடக்கூடாது. நாகமான் தன்னைத் தாழ்த்திக் கொண்டார், அது ஒரு பெரிய ஆசீர்வாதத்திற்கான வழியைத் திறந்தது. தான் தகுதியற்றவள் என்பதை அந்த விதவை உணர்ந்தாள், தேவன் அவளுக்கும் அவளுடைய குடும்பத்திற்கும் உணவளித்து, அவளுடைய மகனை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.

பெரும்பாலும் நம்முடைய மனப்பான்மை மற்றும் மாறுவதற்கும் வளருவதற்கும் உள்ள விருப்பத்தைப் பொறுத்தே நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களை பெறமுடியும். இதுவே நாசரேத்து ஜனங்களுக்கு இயேசுவின் முக்கிய பாடமாக இருந்தது. ஏசாயா புத்தகத்தில் அவர் படித்த வார்த்தைகளின் அடிப்படைக் கொள்கையும் இதுவே. "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார், தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார், இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும் நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு.... "வாசித்தார். (லூக்கா4:18, 19)

நியாயப்பிரமாணத்தின் ஆவி

# இயேசுவின் மலைப் பிரசங்கம்



*Matt Kerry*

"நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்களென்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்..." (யோயேல் 2:1213)

இஸ்ரயேல் தம்மை நேசிக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். அவர்கள் அவருடைய நோக்கங்களையும், அவருடைய பிரமாணங் களுக்கான காரணங்களையும், பலிகளினால் அவர்களுடைய இருதயங்களில் ஏற்படுத்த வேண்டிய தாக்கங்களையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் அவர்களோ தேவனுடைய பிரமாணங்களை ஒரு தொடர் மரபுகளாகக் கருதினர், மேலும் பலர் உலக வெற்றியை அடைவதில் தொடர்ந்து நிலைத்திருந்தனர்.

இன்றைய உலகில், வெற்றி என்பது சில சாதனைகள், சமூக அந்தஸ்து, செல்வம் அல்லது உடைமைகளால் வரையறுக்கப்படுகிறது. வேதாகமத்தை படிப்பதாகவும், கர்த்தரைச் சேவிப்பதாகவும் சொல்லிக்கொள்பவர்களுக்குக் கூட இது ஒரு கண்ணியாக அல்லது பொறியாக இருக்கலாம். உண்மையில் இயேசு அதன் அபாயத்தைப் பற்றி எச்சரித்தார். இஸ்ரயேலர்கள் மனந்திரும்பி, தங்கள் இருதயங்களை மாற்றிக்கொண்டு, தேவனுடைய பிரமாணங்களை உயிர்ப்பிப்பதற்கு ஆண்வருடைய மலைப் பிரசங்கம் அழைப்பு விடுத்தது. அவர்கள் பரிசுத்தத்தைத் தேட வேண்டும் என்றும், அவர்கள் அனைவரும் தேவனுடைய பார்வையில் சமமானவர்கள் என்பதை உணர வேண்டும் என்றும் தேவன் விரும்புகிறார் என்பதை இயேசு தெளிவுபடுத்தினார்.

### பாக்கியவான்கள்

மத்தேயு 5 ஆம் அதிகாரத்தில் "பாக்கியவான்கள்" என்று தொடங்கி, தேவனுக்கு பிரியமாக இருப்பது உலகம் விரும்புவதற்கு நேர்மாறானது என்பதை இயேசு காட்டி,



*Crowds hearing Jesus at the Sermon on the Mount*

வெற்றிகரமான தேவனுடைய பிள்ளையைப் பற்றி வரையறுக்கிறார். "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று இயேசு கூறினார். ஆவியில் எளிமையுள்ளவர்களை தேவன் ஏன் ஆசீர்வதிக்க வேண்டும் ? "துயரப்படுகிறர்வர்கள் பாக்கியவான்கள் ?" அனைவரும் துயரப்படவேண்டும் என்று தேவன் விரும்புகிறாரா ? நிச்சயமாக இல்லை. ஆனால் யோயேல் 2:1213 ஆம் வசனங்களோடு (கட்டுரையின் தலைப்பாக கொடுக்கப்பட்டுள்ள) மத்தேயு 5 ஆம் அதிகாரத்தை ஒப்பிடுகையில், அதன் பொருள் தெளிவாகிறது. தங்கள் சொந்த ஞானத்தில் நம்பிக்கை வைக்க முடியாது என்பதை மனத்தாழ்மையுடன் உணர்ந்து, தேவனை நம்புபவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று இயேசு கூறுகிறார்.

தங்கள் பாவத்தின் நிமித்தம் துக்கப்படுபவர்கள் மற்றும் தேவனுடைய சித்தத்தை உண்மையாக செய்ய விரும்புவோர், தாங்கள் இருக்கும் இடத்திற்கும் இருக்க வேண்டியதற்கு இடையே உள்ள ஆவிக்குரிய இடைவெளியைக் கண்டு புலம்புவார்கள். தேவனை நேசிப்பவர்களுக்கு இயேசுவின் வார்த்தைகள் மெல்லிய தென்றல் போன்றது. அவருடைய போதனைகளுக்கு இருதயங்களை திறந்திருப்பவர்களுக்கு அவை அமைதியையும், ஆவிக்குரிய ஆறுதலையும் கொண்டுவரும். அவருடைய வார்த்தைகள் இன்றும் நம்மை நோக்கி வருகிறது. தேவனுடைய இராஜ்யத்தில் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை இங்கே அவர் சித்தரிக்கத் தொடங்குகிறார்.

### மூலத்தைக் கண்டுபிடித்தல்

"கொலைச் செய்யாதிருப்பாயாக." இந்தக் கட்டளை மிகவும் பரிட்சயமானது மற்றும் நியாயமானது. இருப்பினும் கொலை என்பது பிரச்சனையின் ஆணிவேராக இராமல், பிரச்சனைகளின் உச்சக்கட்டமாக உள்ளது. ஒருவரின் மனதில் அல்லது இருதயத்தில் தூண்டப்பட்ட ஒரு யோசனை அல்லது சிந்தனையின் எதிர் வினையாக பிரச்சனை தொடங்குகிறது. "பிரச்சனையை அதன் வேரில் நிறுத்தவேண்டும்" என்பதே இயேசுவின் அறிவுரை.



*Jesus rebuked the Pharisees*

ஒருவர் அன்பையும் சுயக்கட்டுப்பாட்டையும் பயன்படுத்தினால், கொலைச் செய்வதற்கான வாய்ப்பிருக்காது. "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்ளுகிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனை சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்திற்கு ஏதுவாயிருப்பான்." (மத்தேயு 5:22)

பாவம் பலனளிக்கும் முன்பே வேரோடு அகற்றுவது விவாகரத்துக்கும் பொருந்தும். இயேசுவின் காலத்தில் மனைவியை விவாகரத்து செய்ய பல வழிகள் இருந்தது. தேவனால் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், அவருக்கு அது பிரியமாக இருக்கவில்லை. "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று." (மத்தேயு 5:28)

பெரும்பாலும் விவாகரத்து செய்யும் ஆசையுடன் பிரச்சனை தொடங்குகிறது. பிறரை இச்சையுடன் பார்க்கவேண்டும் என்ற ஆசையை வேரோடு அறுத்து விட்டு, உங்களை நேசிப்பது போல உங்கள் துணையை நேசிக்க வேண்டும் என்று இயேசு கூறுகிறார்.

பிரிந்து செல்லும் எண்ணத்தை என்றுமே ஊக்குவிக்கவேண்டாம். காமத்தை விட சுயக் கட்டுப்பாடு அதிகமாக இருக்கவேண்டும், மேலும் மகிழ்ச்சி என்பது எதையாவது தேடுவதில் இல்லை, மாறாக நம்மிடம் இருப்பதை மற்றும் இருப்பவர்களை கொண்டு நாம் மகிழ்ச்சி அடையவேண்டும்.

விவாகரத்துக்கு பங்களிக்கும் பிற சிக்கல் களும் உண்டு. பெரும்பாலும் தீர்வுக்கு கடினமான முடிவுகளும், ஒவ்வொரு தரப்பிலும் கடினமான உழைப்பும் தேவைப்படுகிறது. பலர் இவ்வாறு முயற்சி செய்ய தயாராக இல்லை. ஆகவே பிரிந்து போவது ஒரு எளிய பதிலாக காணப்படுகிறது. இயேசுவின் காலத்தில், தாங்கள் செய்ய விரும்பியதைச் செய்வதற்கான வழியைக் கண்டுபிடித்த ஜனங்கள் இஸ்ரயேலில் நிறைந்திருந்தார்கள். அவர்கள் நியாயத்திற்கு ஏற்றபடி பிரமாணத்தை வளைத்து, அதை கடைபிடித்தார்கள். இதன் விளைவாக, தேவனுடைய பிரமாணத்தின் உணர்வை முற்றிலும் இழந்தார்கள்.

### இருதயத்தின் நோக்கங்கள்

இயேசு பரிசேயர்களின் நோக்கங்களைக் கடிந்துகொண்டு, நம்முடைய சொந்த நோக்கங்களையும் கேள்வி கேட்கும்படி கேட்டுக் கொண்டார். நம் இருதயத்தின் விருப்பம் தேவனுடைய சித்தம் செய்வதா அல்லது நம்முடைய சுய சித்தம் செய்வதா ? தங்களுக்கு புகழைக் கொண்டுவர விரும்புபவர்களே இந்த உலகத்தில் நிறைந்துள்ளார்கள். அது அரசியல் முன்னேற்றத்திற



*To godly ones, Jesus' words were welcome*

காகவோ, ஆவிக்குரிய மேன்மைக்காகவோ அல்லது பாதுகாப்பின்மைக்கு ஆறுதலளிப்பதற்காகவோ கூட, பரிசேயர்கள் தங்களுக்கு மகிமையைக் கொண்டு வரும் போக்கைக் கொண்டிருந்தனர். அவர்கள் தேவனுடைய ஊழியத்தை, தங்களுடைய சுயத்தை ஊக்குவிக்கும் செயலாகப் பயன்படுத்தினர். அதாவது அவரைக் கௌரவிக்கும் செயலாகப் பயன்படுத்தினர். "ஆகையால், நீ தர்மஞ் செய்யும்போது மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாக தாரை ஊதுவியாதே, அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத்தேயு 6:2)

உண்மையான மனத்தாழ்மையை வளர்ப்பவர்களுக்கே ஆவிக்குரிய முதிர்ச்சி ஏற்படும். உண்மையான தேவபக்தி, சுய விளம்பரத்தைத் தவிர்க்கும். மேலும் நற்கிரியைகள் மற்றவர்களிடமிருந்து மறைக்கப்படும்போதும், இரகசியமாக தேவனை பிரியப்படுத்துவதற்கான வேரூன்றிய ஆசையை வளர்க்கிறது. "நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர் களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது

அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்." (மத்தேயு 6:1718)

இயேசு உலக ஆசையில் உள்ள ஆபத்தைப் பற்றி பேசுகிறார். லூசிபரின் பேராசையே முதல் பாவத்திற்கு வழிவகுத்தது. "நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன், உன்னதமான வருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே.." (ஏசாயா14:14)

பேராசை என்பது நம் இருதயத்தில் இருக்கும் ஒரு பாவமான பண்பு. நாம் அதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். உலக ஆசைகளைக் கொண்டவர்களுக்கு வேதம் எச்சரிப்புகளால் நிறைந்தருக்கிறது. "மேலும் ஐசுவரியவான் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (மத்தேயு19:24)

"மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒரு வருஷம் தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது ? கொஞ்சக்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே. ஆதலால், ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும்." (யாக்கோபு 4:1315) "ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங் களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப் போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது, அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப் போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசிநாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்." (யாக்கோபு5:13)

இந்த எச்சரிக்கைகளுக்குப் பிறகும், பேராசை இன்னும் ஜனங்களை விழுங்குகிறது. நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்ய விரும்பினால், நம்முடைய ஆவிக்குரியதாக மாற வேண்டும் என்று இயேசு கூறுகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக தேவனைப் பிரியப்படுத்துவதற்கான விருப்பம் இருக்கவேண்டும். மேலும் உலக வெகுமதி களுக்கான விருப்பத்திலிருந்து நம் இருதயங்களை வெறுமையாக்க வேண்டும். நாம் உலக உடைமைகளை விரும்பினால், தேவனுக்கு தன்னலமற்ற சேவை செய்தவதற்கான எந்தவொரு விருப்பமும் தடைபடும். நம்முடைய பூமிக்குரிய உடைமைகள் எந்த நேரத்திலும் அழிக்கப்படலாம் என்பதை உணர்வதற்கு இது உதவியாக இருக்கும். கண் இமைக்கும் நேரத்தில் ஒரு ஜீவிய காலத்தின் வேலை முடிந்துவிடுவதை கற்பனை செய்து பாருங்கள்.

பங்குச் சந்தை வீழ்ச்சி அடையலாம். ஒரு அழகான வீடு எரிக்கப்படலாம். நம்முடைய உடைமைகள் மற்றும் உள்ளூர் பொருளாதாரம் இரண்டையும் அழிக்கும் ஒரு போர் வரலாம். உலகின் அனைத்து காரியங்களும் தற்காலிகமானவை மற்றும் விரைவாக மறையக்கூடியவைகள். ஆயினும்கூட, அவை மனித இனத்திற்கு மகிழ்ச்சிக்கான பாதை களாக எதிரியால் வழங்கப்படுகிறது. தேவனைச் சேவிப்பதும், உலக பொருள்களை (mammon) சேவிப்பதும் முற்றிலும் வேறுபட்ட இரண்டு பாதைகள், ஒவ்வொன்றும் மற்றொன்றுக்கு முரணானது. இரண்டிலும் நாம் வெற்றிகரமாக பயணிக்க முடியாது.

ஒருவர் மூத்தவராக இருந்தால், சகோ. ரசல் (மத்தேயு 24:45) அவர்களை மேற்கோல் காட்டி, சத்தியத்தை இன்னும் சிறப்பாக விவரிக்கக்கூடிய திறமையினால் பெருமைப்படுகிறாரா அல்லது பார்வையாளர்களை கவர்கிறாரா ? அப்படியானால், அவர் தனிப்பட்ட சாதனைகளின் உணர்வுகளை அகற்ற முயற்சிக்க வேண்டும், மேலும் அவரது திறமையில் ஒருபோதும் மகிழ்ச்சியடையக்கூடாது. மாறாக, அவர் எல்லா மகிமையையும் தேவனுக்குக் கொடுக்க வேண்டும். சர்வ வல்லமையுள்ள தேவனுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் ஊழியம் செய்யும் திறனை ஒரு தாழ்மையான அனுபவமாக ஏற்றுகொள்ளவேண்டும். மேலும் தேவனுடைய உதவி மற்றும் அவருடைய வழிகாட்டுதலுக்காக அவரை சார்ந்து கொள்ளாமல் யாராலும் வெற்றிகரமாக சேவை செய்யவும் முடியாது.

யாராவது ஒரு குழுவில் இருந்தால் அல்லது ஊழியம் செய்ய வேறு வாய்ப்புகள் இருந்தால், ஒவ்வொரு சேவையிலும் நமது சொந்த முயற்சிகளைப் பாராட்டுவதற்கான ஒரு சோதனை வருகிறது என்பதை உணர வேண்டியது அவசியம். அதற்குப் பதிலாக, நம்மிடம் இருக்கும் எந்தத் திறமைக்கும், அதைச் சரியாகப் பயன்படுத்துவதற்கான பாக்கியத்திற்கும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். நம் இருதயங்கள் நன்றியினால் நிரம்பி வழிய வேண்டும். நம்முடைய சேவை ஆசீர்வாதமாகவும், அது தேவனுக்கு கௌரவமாகவும் இருக்கவேண்டும் என்பதே நம்முடைய விருப்பமாக இருக்கவேண்டும். நாம் சேவை செய்வதில் பெருமிதம் கொள்கிறோம் என்றால், நம்முடைய சேவையினால் அவரை நாம் கனவீனப்படுத்துகிறவர்களாக இருப்போம். "நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்." (மத்தேயு7:19)

## ஒரு இதமான (இனிமையான) தைலம்

உலகத்திற்கும், தவறான காரணங்களுக்காக தேவனைச் சேவித்தவர்களுக்கும், இயேசுவின் மலைப்பிரசங்கம் மனவருத்தம் தரும் பேச்சாக இருந்திருக்கலாம். ஆனால் தங்கள் தோல்விகளையும் குறைகளையும் உணர்ந்து கொள்ளும் தாழ்மையுள்ள உள்ளம் கொண்டவர்களுக்கு, அந்த பிரசங்கம், தங்கள் வலியையும், தேவனுடைய இராஜ்யத்திற்கான ஏக்கத்தையும் மறைப்பதற்கு ஒரு இனிமையான தைலமாக இருந்தது. இந்த வார்த்தைகளை நாம் பல முறை படித்திருக்கிறோம், இன்னும் பல வருடங்கள் செல்லச் செல்ல அவைகளின் புதிய அர்த்தங்கள் வெளிப்படுகிறது. ஒவ்வொரு முறையும் நாம் இயேசு கற்பித்த பாடங்களை ஆராயும் போது நம்முடைய அனுபவங்களும், முதிர்ச்சியும், தேவனுடனான வளர்ந்து வரும் உறவும் தொடர்ந்து நமக்கு அதிக ஞானத்தையும் நுண்ணறிவையும் தருகிறது. நாம் ஆவிக்குரிய ரீதியில் வளரும்போது, அவருடைய வார்த்தைகள் அதிகமாக எதிரொலிக்கிறது. இந்த வளர்ச்சியை நாம் அனுபவிக்கவில்லை யென்றால், அப்போஸ்தலர் விவரித்தபடி நாம் ஆபத்தில் இருக்கக்கூடும். "எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற..." (2தீமோத்தேயு3:7)

ஆழமான புரிதல் என்பது அதிக அறிவார்ந்த திறனால் வருவதல்ல, மாறாக பரிசுத்தத்தின் ஆவியால் மேலும் மேலும் செல்வாக்கு பெற்ற இருதயத்தில் இருந்து வருகிறது. இது நம்முடைய எண்ணங்கள், தேர்வுகள் மற்றும் செயல்களை பாதிக்கிறது, மேலும் அதிக பரிசுத்தத்தை ஏற்படுத்துகிறது.

"முதலாவது தேவனுடைய இராஜ்யத தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்." (மத்தேயு6:33)

### பொருள் கொண்ட கதைகள்

# கடலின் உவமைகள்



John Bivol

"... நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது." (யோவான் 6:63)

அப்போஸ்தலர்கள், சீஷர்களுடன், ஆலயத்தின் அதிகாரிகளும் கூட தேவனுடைய ஆவியை நம் ஆண்டவரில் கண்டார்கள். "அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்." (யோவான் 7:46) அழைக்கப்பட்டால் மட்டுமே, அத்தகைய மனிதரை ஒருவரும் பின்பற்ற முடியாது என்பதைப் புரிந்துகொள்வது கடினம். அவருடைய சீஷர்கள் அவருடன் செலவழித்த நேரம் அவர்களின் வாழ்க்கையில் மிகப் பெரிய அனுபவம். இருப்பினும் அவர்களிடம் இன்னும் கேள்விகள் இருந்தது. அடுத்து என்ன நடக்கும், எப்போது இராஜ்யம் நிறுவப்படும் ? அவர்களுடைய வெகுமதி என்னவாக இருக்கும், இயேசு திரும்பி வருவதற்கு எவ்வளவு காலம் ஆகும் ? இயேசுவின் ஊழியத்தின் பாதியில், கலிலேயா கடற்கரையில் ஒரு சக்திவாய்ந்த பிரசங்கத்தை வழங்கினார், அது அவர்களின் சில கேள்விகளுக்கு பதிலளிக்க உதவியது. இது ஏழு உவமைகளைக் கொண்டது. மத்தேயு 13ம் அதிகாரத்தில் இவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேவனுடைய வார்த்தைக்காக உண்மையிலேயே தாகம் கொண்டவர் யார் என்றும், அவரைப் பின்பற்றத் தயாராக இருக்கிறார்களா என்பதைத் தீர்மானிக்க அவருடைய வார்த்தைகள் ஒரு சோதனையாக இருந்தது. இந்த உவமைகளை கேட்பவர்களுக்கு மட்டுமல்ல, சுவிசேஷ யுகம் முழுவதும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் நம்பிக்கை அளித்தது.

அந்த நேரத்தில் சீஷர்கள் மேசியா விரைவில் இஸ்ரயேலை விடுதலைச் செய்து, அனைத்து நாடுகளையும் ஆட்சி செய்வார் என்று எதிர்பார்த்தார்கள். இந்த ஏழு உவமைகளிலும், தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிய அடிப்படைக் கருத்துக்களை இயேசு அறிமுகப்படுத்தினார். ஒவ்வொரு உவமையும் இராஜ்யத்தின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தை விவரிக்கிறது, அதே நேரத்தில் ஆவிக்குரிய வளர்ச்சியின் பொதுவான கருப்பொருளையும் கொண்டுள்ளது.



Parable of the Sower

மனிதர்களின் இருதயங்களில் சத்தியத்தின் விதையை விதைப்பதில் தொடங்கி, கிறிஸ்துவ முன்னேற்றத்தின் படிகளை இயேசு வெளிப் படுத்தினார். வெளிப்படுத்தலில் விவரிக்கப்பட்டுள்ள சபையின் ஏழு நிலைகளுக்கு இணையாக இந்த ஏழு உவமைகள் காணப்படுகிறது.

**விதைப்பவரின் உவமை**

**(மத்தேயு 13:3-9; 18-23) - எபேசு**

ஒரு மனிதன் தன் வயலில் விதை விதைப்பதை இந்த உவமை விவரிக்கிறது. அவர் விதைத்தபோது, சில விதைகள் பாதையில் விழுந்தது, பறவைகள் அவற்றைத் தின்றுவிட்டது. சில விதைகள் பாறையின் மேல் விழுந்து வெயிலினால் கருகி போனது. இன்னும் சில விதைகள் முட்கள் நிறைந்த நிலத்தில் விழுந்தது, செடி வளராமல் முள் அதை நெருக்கிபோட்டது. இறுதியாக, சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்து, விரும்பிய தானியத்தை உற்பத்தி செய்தது.

உவமையில் உள்ள விதை நான்கு வெவ்வேறு வகையான ஜனங்கள் மீது விழும் தேவனுடைய வார்த்தையை, பல்வேறு வகையான நிலங்களாக சித்தரிக்கப்படுகிறது. இந்த வார்த்தையைக் கேட்பவர்களின் பல்வேறு இருதய நிலைகளை இது விவரிக்கிறது. சில விதைகள் வழியோரம் விழுந்து பறவைகளால் உண்ணப்பட்டது. மற்ற விதைகள் பாறை நிலத்தில் விழுந்து செழிக்காமல் போனது. சில விதைகள் முட்களுக்கு நடுவே விழுந்து வளர முடியாமல் திணறிபோயிற்று. ஆனால் நல்ல நிலத்தில் விழுந்த விதை, ஏராளமான கனிகளைத் தந்தது. இப்படியாக ஆவிக்குரிய பலனை மிகுதியாக கொண்டுவரும் இருதயங்களை ஆண்டவர் தேடுகிறார் என்பதே இதன் தனிப்பட்ட பாடம். சுவிசேஷ யுகத்தின் தொடக்கத்தில் தேவனுடைய வார்த்தையின் ஆரம்ப நிலையையும் இந்த உவமை விளக்குகிறது.

விதைத்தவர்கள் நம்முடைய கர்த்தரும் அப்போஸ்தலர்களும். இதற்கு தொடர்புடைய முதல் சபை வெளிப்படுத்தலில் எபேசு சபையாகும். இதற்கு "முதன்மையான" அல்லது "விரும்பத்தக்க" என்று பொருள் என்று சகோ. ரசல் பரிந்துரைக்கிறார். (R5992:3)முதலில் கிறிஸ்தவர்களாக மாறியவர்கள் மற்றும் மூப்பர்களின் தூய்மையை இது விவரிக்கிறது. இருப்பினும், சில விதைகள் கல்லான இருதயங்களில் விழுந்தது என்பதற்கான அறிகுறியாக, சபை ஆதியில் கொண்ட அன்பை விட்டுச் சென்றதாக விமர்சிக்கப்படுகிறது.



*Ruins of Thyatira*



*Treasure Hid in a Field*

**கோதுமை மற்றும் களைகளின் உவமை (மத்தேயு 13:24-30; 36-43ன்) - சிமிர்னா**

இயேசு சொன்ன அடுத்த உவமை, பரலோகராஜ்யத்தை ஒரு மனிதன் தனது வயலில் விதைப்பதற்கு ஒப்பிடப்பட்டது. மனுஷர் நித்திரைப் பண்ணுகையில், சத்துரு வந்து அவனுடைய வயலில் களைகளை விதைத்து விட்டுப் போனான். கோதுமையும் களைகளும் வளர்ந்தபோது, ஊழியர்கள் களைகளை அகற்ற பரிந்துரைத்தனர். ஆனால் தவறாக கோதுமை பறிக்கப்படாமல் இருக்க, அறுவடை காலம் வரை இரண்டையும் வளர அனுமதிக்குமாறு அவர்களிடம் கூறப்பட்டது. அறுவடையில், அதாவது யுகத்தின் முடிவில், (வெளிப்படுத்துதல் 18:4) களைகள் அகற்றப்பட்டு எரிக்கப்படும். சுவிசேஷ யுகத்தின் முழுவதும், கிறிஸ்துவத்தை அடையாளப்படுத்தும் வயல், உண்மையான விசுவாசிகள் (கோதுமை) மற்றும் பெயருக்கு மட்டுமே விசுவாசிகளின் (களைகள்) கலவையாக இருக்கும் என்பதை இந்த உவமை வெளிப்படுத்துகிறது.

சுவிசேஷ யுகத்தின் ஆரம்ப காலத்தில் விநியோகிக்கப்பட்ட சத்தியத்தை எதிர்க்க, துன்மார்க்கனாகிய சாத்தான், கிறிஸ்தவ உலகில் பிழைகளையும் உலகத்தன்மைகளையும் விதைகளாக விதைத்தான். இந்த தீர்க்கதரிசனம் அப்போஸ்தலர்கள் மறைந்த ஒரு காலக்கட்டத்தை சபையின் இரண்டாம் கட்டமாக சுட்டிக்காட்டுகிறது. (மத்தேயு13:25) இந்த நேரத்தில் சபையில், "அக்கிரமத்தின் இரகசியம்" மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. (2தெசலோனிக்கேயர் 2:7)

சிமிர்னா என்று பெயரிடப்பட்ட இரண்டாம் சபை கடுமையான சொற்களில் விவரிக்கப் பட்டுகிறது. "உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன்" (வெளிப்படுத்துதல் 2:9)

## கடுகுவிதையின் உவமை

## (மத்தேயு 13:31, 32) பெர்கமூ

அடுத்த காலகட்டத்தில், சபை உலக வல்லமையில் வளர்ந்தது. இயேசு அதை ஒரு சிறிய கடுகு விதை என்று விவரித்தார், அதன் கிளைகளில் பறவைகள் தங்கும் அளவுக்கு அது பெரிய மரமாக மாறியது. சபையை முதன் முதலில் துன்புறுத்திய புறமத ரோமானியப் பேரரசு, அதன் போக்கை மாற்றி, கிறிஸ்தவத்தை அதன் அதிகாரப்பூர்வ மதமாக ஏற்றுக்கொண்டது. பெயரளவிலான கிறிஸ்தவப் பேரரசு அரசின் சிவில் அதிகாரத்தின் மீது ஆதிக்கம் செலுத்தியது. சபை பெர்கமூ காலகட்டத்தில், துன்புறுத்தப்பட்ட வகுப்பினரை ஆவியில் இருந்த இயேசு "..நீ என் நாமத்தைப் பற்றிக் கொண்டிருக் கிறதையும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன்" என்று சொல்லி பாராட்டினார். (வெளிப்படுத்துதல் 2:13) இந்த பரிசுத்தவான்கள் திரித்துவம் மற்றும் நித்திய ஆக்கினை போன்ற புறமதக் கோட்பாடுகளுக்கு எதிராகப் பேசினர். ஆனால் ஆவிக்குரிய "வேசித்தனம் ஆரம்பித்தது, கடுகு மரமானது சத்தியத்திற்கு எதிராக மிகவும் வல்லமை பெற்றது.

ஆவியானவர் சொன்னதைக் கேட்டு ஜெயங்கொண்டவர்களுக்கு மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, வெண்மையான குறிக் கல்லையும் அந்தக் கல்லின் மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்று இயேசு சொன்னார். (வெளிப்படுத்துதல் 2:17)

சத்திய வார்த்தையை உண்மையாகக் கேட்பவர்கள், அதை உலக நன்மையைத் தேடுவதற்காக கேட்காமல், ஆவிக்குரிய நோக்கத்தோடு பெற்றுகொள்ளவேண்டும்.

## புளித்தமா உவமை

## (மத்தேயு 13:33) தியத்தீரா

இந்தச் சிறு உவமையில், மூன்ற படி மாவை முழுவதும் புளித்துப் போகும் வரை மறைத்து வைத்திருந்த ஒரு ஸ்திரீயைப் பற்றி இயேசு விவரித்தார். இந்த மாவு முதலில் புளிக்கவில்லை என்று அறிவுறுத்தப்படுகிறது. இருப்பினும் காலப்போக்கில் அந்த ஸ்திரீயின் செயல் அந்த மாவை முழுவதுமாக புளிக்க வைத்தது. இதற்கு தொடர்புடைய சபை தியத்தீரா. அங்கு, அந்த ஸ்திரீக்கு யேசபேல் என்று பெயரிடப்பட்டது. அவளுடைய செல்வாக்கின் கீழ் சபை கிறிஸ்தவ மண்டலத்தின் இராஜாக்களுடன் ஆவிக்குரிய வேசித்தனம் செய்தது. (வெளிப்படுத்துதல் 2:20-23)

பரிசுத்தமான கோட்பாடுகளைக் கடைப் பிடிப்பதன் மூலம் தேவாராதனையை பரிசுத்தமாக காத்துக்கொள்ளவேண்டும் என்பதே உண்மையான விசுவாசிகளுக்கான பாடமாகும்.

அடுத்த மூன்று உவமைகள் அப்போஸ்தலர் களுக்கு மட்டுமே பேசப்பட்டது (மத்தேயு காண்க13:36) எபிரெயர் 5:14ல் விவரிக்கப் பட்டுள்ளபடி, இவை அதிக முதிர்ச்சியுள்ளவர் களுக்காகவே சொல்லப்பட்டது.

## ஒரு நிலத்தில் புதைந்திருந்த பொக்கிஷம் (மத்தேயு 13:44) சர்தை

"அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக் கிறது. அதை ஒரு மனுஷன் கண்டு மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்." இந்த சிறிய உவமை இயேசுவையே சித்தரிக்கிறது. அவர் பரலோக மகிமையை விட்டு, சபையையும் உலகத்தையும் தனது இரத்தத்தால் விலைக்கு வாங்கினார். அவர் பொக்கிஷம் இருந்த நிலத்தை விலைக்கு வாங்கினார். பாவம் தவறும் முக்கியத்துவம் வாய்ந்த நீண்ட, விரிவான உவமைகளை அவர் கொடுத்த பிறகு, மனுக்குலத்தை காப்பாற்றுவது தனக்கு முக்கியம் என்பதையும், இந்த உலகத்தை தான் பொக்கிஷமாக் கருதினார் என்பதையும் இயேசு இப்போது வெளிப்படுத்தினார்.

ஆசரிப்புக் கூடாரத்தில், பலவிதமான பாவ நிவாரண பலிகளின் இரத்தத்தை பிரதான ஆசாரியர் தரையில் ஊற்றினார். இது இயேசு சொன்ன உவமையைப் போன்றது மற்றும் பாவத்திற்கான ஒப்புரவாகுதலோடு, இயேசு இந்த உலகின் ஆதிக்கத்தையும் விலைக்கு வாங்கினார் என்பதைக் குறிக்கிறது. (லேவியராகமம் 4:7,18,25,30) இரட்சிப்பின் பணியில் தன்னை அர்ப்பணிக்க, இயேசு ஆவியின் ஜீவியாக தன்னுடைய ஜீவனையும் பரலோகத்தின் மகிமைகளையும் விட்டு கொடுத்தார். மனிதனாக, அவர் நிலத்தை விலைக்கு வாங்கினார், இப்போது மனுஷனுக்கும் அவரது ஆதிக்கத்திற்கும் சட்டப்பூர்வமான உரிமையாளராக உள்ளார். இதற்கு தொடர்புடைய சபை சர்தை. அங்கு, கிறிஸ்தவம் ஆவிக்குரிய மிகக் குறைந்த நிலையை அடைந்தது. ஒரு சில பெயர்கள் மட்டுமே தங்கள் வஸ்திரங்களை தீட்டுப்படுத்தாதிருந்தார்கள். இவர்கள் கர்த்தரோடு நடப்பதற்கு தகுதியுள்ளவர்களானார்கள். ஜீவ புத்தகத்திலிருந்து அவர்களுடைய பெயர்கள் அழிக்கப்படாது என்று இயேசு கூறினார். அவர் நிலத்தையும் அதன் பொக்கிஷத்தையும் வாங்கியதால், இந்த வாக்குறுதியை அளிக்க முடிந்தது. ஜீவனை கொடுப்பதற்கும், எடுப்பதற்கும் அவருக்கு உரிமை உண்டு. இந்த உவமை இயேசு மதிக்கும் விஷயங்களை மதிப்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

நாம் தேவனுக்கு நம்மை அர்ப்பணிக்கும் போது, இயேசு எந்த பணிக்காக மரித்தாரோ, அதாவது இழந்த அனைத்தையும் மீட்டெடுப்பதற்காக நாமும் நம்மை அர்ப்பணிக்கிறோம்.

## விலையுயர்ந்த ஒரு முத்து (மத்தேயு 13:45, 46) - பிலதெல்பியா

"மேலும், பரலோக இராஜ்யம் நல்ல முத்துக் களைத் தேடுகிற வியாபாரிக்கும் ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்."

இயேசு விலையுயர்ந்த முத்தை பரலோக ராஜ்யத்திற்கு ஒப்பிட்டார். மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கான அழைப்பு மற்ற, எல்லா முத்துக்களையும் சிறிய மதிப்புடையதாக ஆக்குகிறது. இந்த அழைப்பை ஏற்றுக் கொள்பவர்கள் மகிழ்ச்சியுடன் தங்களிடம் உள்ள அனைத்தையும் விற்று, தேவனுடைய பணியில் தங்களை அர்ப்பணிக்கிறார்கள்.

இயேசு மலைப் பிரசங்கத்தில், "பரிசுத்த மானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள், உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள், போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து? திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்." (மத்தேயு7:6) என்று கூறினார். இந்த முத்துக்களும் விலையுர்ந்தது. இவை தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களைக் குறிக்கின்றது. இந்த சத்தியங்கள் பெரும் எதிர்ப்பை மேற்கொண்டு, மேலும் விலையுயர்ந்ததாக மாறிவிட்டது.

இந்த சத்தியங்கள் கண்டுபிடிப்பது எப்போதும் எளிதல்ல. உழைப்பையும், பலியையும் பல சமயங்களில் விலையாக கொடுக்கப்படவேண்டும். ஆனால் இந்த முயற்சிக்கு தேவனுடைய மனது, அற்புதமான வெகுமதி அளிக்கிறது. இந்த உவமையில், மறைந்திருக்கும் புதையலை விவரிக்கும் முந்தைய உவமையுடன், இருவரும் தாங்கள் பார்த்தவற்றின் பெரும் மதிப்பைப் புரிந்துகொண்டு, அவற்றை அடைய தங்களிடம் உள்ள அனைத்தையும் விற்றனர். தேவனுடைய வார்த்தையை நேசிப்பவர்கள் மற்றும் அதற்காக தங்களை அர்ப்பணிக்கத் தயாராக இருப்பவர்களின் இருதயத்தை அவர்களின் உண்மையான ஆசை சித்தரிக்கிறது. இதற்கு தொடர்புடைய சபை பிலதெல்பியா, இது சீர்திருத்தத்தை உள்ளடக்கிய காலம்.

அந்த காலத்தில் பல முத்தான சத்தியங்கள் கிடைத்தது. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலே, மிகவும் குறிப்பிடத்தக்க சத்தியமாக இருந்தது. ஒருவர் தேவனோடு ஐக்கியப்படுவதற்கு கிறிஸ்துவின் ஈடுபலியின் புண்ணியம் மட்டுமே அடிப்படை என்பதை இந்த சத்தியம் தெளிவுபடுத்தியது.

பிலதெல்பியா சபையுடன் ஒரு குறிப்பிடத்தக்க தொடர்பு வெளிப்படுத்துதல் 3:8இல் உள்ளது. "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்." கிறிஸ்துவின் புண்ணியத்தைத் தவிர வேறு எந்த வழியிலும் தேவனை அணுகுவது இயேசுவின் பலியின் பலனை மறுப்பதாகும். மீட்கும் பொருளின் புண்ணியமும், அதை நாம் ஏற்றுக்கொள்வதும் தான், பரலோகத்திற்கான கதவைத் திறக்கிறது. இந்த அற்புதமான சத்தியமாகிய முத்து, தேவனிடம் செல்லக்கூடிய பாதையை அறிவூட்டுகிறது. இந்த கதவை எந்த மனிதனும் மூட முடியாது.

**வலையின் உவமை**

**(மத்தேயு 13:47-50) - லவோதிக்கேயா**

இது இயேசுவின் பிரசங்கத்தில் சொல்லப்பட்ட இறுதி உவமை. பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகல விதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பிட்டு இயேசு பேசுகிறார். அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள் என்றார்.மீன்கள் கடலில்

இருந்து எடுக்கப்பட்ட பின், அவைகள் பிரிக்கப்பட்டு, நல்லவைகளை ஒரு கூடையிலும், கெட்டவைகள் தூக்கி எறியப்பட்டது. இயேசு அதன் நிறைவேற்றத்தின் கால அமைப்பைப் பகிர்ந்து கொண்டபோது, "இப்படியே உலகத்தின் (யுகத்தின்) முடிவிலே நடக்கும்" என்றார். (வசனம் 49) இந்த உவமை யுகத்தின் முடிவில் பரிசுத்தவான்கள் இடையே நடை பெறும் கூடுதல் தேர்வின் செயல்முறையை விவரிக்கிறது. இது லவோதிக்கேயா காலகட்டமாகும், ஏனெனில் வெது வெதுப்பாக இருப்பவர்களுக்கும் தேவனுடைய விருப்பத்தை ஆர்வத்துடன் செய்பவர்களுக்கும் இடையில் ஆண்டவர் பகுத்தறிகிறார். ஜெயங்கொள்பவர்கள் கர்த்தருடன் அவருடைய சிங்காசனத்தில் உட்கார அனுமதிக்கப்படுகிறார்கள், அதே நேரத்தில் வெதுவெதுப்பானவர்கள் அவரது வாயிலிருந்து உமிழப்படுகிறார்ள்.

இந்த உவமை கோதுமையை களையிலிருந்து பிரிப்பதை விட வித்தியாசமானது. களைகள் எரிப்பதற்கு வயலில் விடுப்படுகின்றன. கடலில் இருந்து மீன்கள் வெளியே எடுக்கப்பட்ட பிறகு நடக்கும் பிரிவைக் குறித்து சகோ. ரசல் விளக்குகிறார். "பல்வேறு வகையான மீன்கள் சுவிசேஷ வலையில் சிக்கியுள்ளது, சில மீன்கள் உலக இலட்சியங்கள்... மற்றவை சமூக சலுகைகள் மற்றும் நிலைப்பாட்டின் காரணமாக, மற்றவை ஒழுக்கமான சூழ்நிலையை சுவாசிக்க விரும்புவதால்... போன்றவை"(R5048).

**இயேசு சொன்ன சுருக்கம்**

இயேசு தனது பிரசங்கத்தை முடித்தவுடன், அவருடைய வார்த்தைகள் புரிகிறதா என்று சீஷர்களிடம் கேட்டார். (மத்தேயு 13:51) அவர்களின் உறுதியான பதிலுக்குப் பிறகு, அவர் "இப்படியிருக்கிறபடியால், பரலோகராஜ்யத்துக் கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் " (வசனம் 52)என்று அவர் கூறினார்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவரை நம்பியவர்கள் இப்போது இராஜ்யத்தின் பொக்கிஷங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள பொறுப்பாளிகள் என்றார். சுவிசேஷ யுகம் கடந்துச் செல்லும் போது, விசுவாசிகள் பழைய சத்தியங்களை அவர்களின் புதிய வழிகளில் புரிந்துகொள்ள உதவுவதற்காக, சபையின் ஒவ்வொரு கட்டத்திற்கும் அவர் "வேத பாரகர்கள்" அல்லது தூதுவர்களை அனுப்புவார். இந்த பொறுப்பு இயல்பாகவே விசுவாசமுள்ள அனைவருக்கும் செல்கிறது. சுவிசேஷ யுகத்தின் முடிவில் ஜீவிப்பது ஒரு சிறப்பான பாக்கியம். முந்தைய காலங்களில் இருந்ததை விட அறுவடையின் போது அதிகமான சத்தியம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த முத்துக்கள் ஒவ்வொருவருடைய இருதயங்களிலும் பொக்கிஷமாக இருந்து, ஒவ்வொரு விசுவாசியையும் விசுவாசத்திற்காக ஊக்குவிக்க வேண்டும். இயேசுவின் வார்த்தைகள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது. நித்திய ஜீவ வார்த்தைகளை அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார். (யோவான் 6:63,68) புத்தியுள்ளவர்கள் அதை புரிந்துகொள்வார்கள்.

நம்முடைய இலக்கு

# உண்மையிலேயே நீதிமான் அல்லது வெறுனே மதவாதி



"வேதபாரகரும், பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்." (மத்தேயு 23:2)

*Micah Hess*

இயேசுவின் ஊழியத்தை நேரில் பார்த்தபோதிலும், பெரும்பாலான பரிசேயர்களின் இருதயங்கள் அசையவில்லை. மாறாக, அவரை சோதித்து இடறச் செய்வதற்கு வழிகளைத் தேடினார்கள். மத்தேயு 23இல், பரிசேயர்களின் பிடிவாதத்தை இயேசு நேரடியாகக் குறிப்பிடுகிறார், அவர்களின் நம்பிக்கை எவ்வாறு வேறு மதமாக மாறியது என்பதை அம்பலப்படுத்தினார். அவர்கள் மற்ற மனிதர்களை விட தங்களை உயர்த்திக் கொள்ள பயன்படுத்தும்படியாக பிரமாணங்களை ஆடம்பரமான விதிகளின் தொகுப்பாக மாற்றியமைத்தனர். தேவனுடைய கொள்கைகள் இல்லாத சம்பிரதாயத்தின் விளைவுகளை இயேசு அறிவித்தார். தனிநபர்கள் மற்றும் இஸ்ரயேல் தேசத்தின் மீது அதன் தாக்கத்தை அவர் விளக்கினார். அந்த விதிகள் குழந்தைகளுக்கும், கொள்கைகள் மனுஷருக்குமானது என்று சகோதரர் ரசல் கூறினார்.



*Jesus addressing Pharisees*

### சன்மார்க்கமும் மதமும் முரண்படுகிறது

மத்தேயு 23 இல் இயேசுவின் பிரசங்கத்தின் தொடக்கத்தில், நல்லொழுக்கத்தை வளர்ப்பதன் விளைவாக வரும் உண்மையான நீதிக்கும், மதத்தின் முகப்புக்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுகிறது. பரிசேயர்கள் மோசேயின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்ட போது, அவர் களுடைய செயல்கள் அவர்களுடைய உண்மையான ஆசைகளை வெளிப்படுத்தியது. அவர்களின் இலட்சியங்கள் நீதியானதாக இருந்திருந்தால், பழைய ஏற்பாடு வேதங்களுக்கு இன்னும் அதிகதிகமாக கீழ்ப்படிவதற்கு ஜனங்களை வழிநடத்தியிருப்பார்கள். அவர்கள் தேவனுடைய கிருபை மற்றும் இரக்கத்தின் அஸ்திபாரத்தின் மேல் கட்டியெழுப்பப்பட்டிருப்பார்கள், அதே நேரத்தில் அவர்கள் இரட்சிப்பின் வாக்குறுதியையும் அவர்களுக்கு சுட்டிக்காட்டினார்.

இதன் விளைவாக, இயேசு அவர்களைக் கடிந்துகொண்டார், ஜனங்கள் அவர்களின் வார்த்தை களுக்கும் வேதாகமத்தின் போதனைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும், ஆனால் அவர்களின்

முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டாம் என்று கூறினார். அனுகூலமான நிலையில் இருப்பது, சாதகமாக இருந்தாலும், அதுவே நீதிக்கு வழிவகுக்காது என்பதை அவர்களின் வாழ்க்கை விளக்குகிறது. இந்த கடுமையான பாடத்தை இயேசு 5ம் வசனத்தில் தெளிவுபடுத்துகிறார். "தங்கள் கிரியைகளெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்." (வசனம் 5)

அவர்களின் மத சம்பிரதாயம் தேவனைப் பிரியப்படுத்தும் விருப்பத்தால் தூண்டப்படவில்லை. மாறாக, அது மற்றவர்களை விட தாங்கள் அதிக நீதியுள்ளவர்களாகத் தோன்றுவதாக இருந்தது. அவர்கள் பல சரியான விஷயங்களைச் செய்திருந்தாலும், அது பெரும்பாலும் தவறான காரணங்களுக்காகவே இருந்தது.

### ஏழு துயரங்கள் (ஐயோ)

பரிசேயர்களுக்கு வரப்போவதாக இயேசு சொன்ன ஏழு துயரங்களை மத்தேயு பதிவு விவரிக்கிறது. இவை ஒவ்வொன்றிலும், அவர்கள் எவ்வாறு நீதியைக் கொண்டுவரத் தவறினார்கள் என்பதை மட்டுமல்லாமல், மற்றவர்களை தீவிரமாக தடுமாறச் செய்தார்கள் என்பதையும் அவர் விவரித்தார். ஸ்டராங்கின் அகராதி "ஐயோ" என்ற வார்த்தையை "துக்கத்தின் முதன்மையான ஆச்சரியக்குறி" என்று வரையறுக்கிறது. "துக்கம் அல்லது கண்டனத்தின் இடைச் சொல்" என்று தேயர் கூறுகிறார்.

பரிசேயர் சதுசேயர் மீதான புகார்களின் பட்டியல், அவர்கள் இயேசுவை நிராகரித்ததற்கான காரணத்தையும் அதனால் ஏற்படும் பிரச்சனையையும் தருகிறது.

### முதல் ஐயோ - இராஜ்யத்தை தடுத்து நிறுத்துதல் - வசனம் 13

"மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள், நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்கவிடுகிறதுமில்லை."

பரிசேயர்களின் மற்றவர்களை விட பெரியவர்களாகவும், அதிக நீதியுள்ளவர்களாகவும் தோன்றுவதற்கான அவர்களின் விருப்பத்தின் விளைவே அவர்களின் பாசாங்குத்தனம் என்பதை இயேசு முன்பு விளக்கினார். அன்பில் உண்மையான விசுவாசம், தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்குமான கீழ்ப்படிதல் ஆகியவற்றினால் உந்தப்படாத போது, மதம் பெரும்பாலும் இந்த விழுந்தபோன ஆசைகளுக்கு இணங்கிவிடுகிறது அல்லது குறைக்கப்படுகிறது. பரிசேயர்கள் பாரம்பரியம் மற்றும் மனிதர்களின் உறுதிப்பாட்டின் அடிப்படையில் ஒரு மத அமைப்பை உருவாக்கினர். அவர்களுடைய பெருமை, தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு தேவையான அங்கீகரிப்பதிலிருந்து அவர்களைத் தடுத்தது.

அவர்களின் செல்வாக்கின் விளைவாக, பல இஸ்ரயேலர்கள் தேவனுடைய உண்மையான தேவைகளுக்கு கண்மூடித்தனமாக இருந்தனர் மற்றும் இயேசுவை தங்கள் மேசியாவாக அங்கீகரிக்கும் விசுவாசத்தை வளர்க்கத் தவறிவிட்டனர்.

### இரண்டாவது ஐயோ - தவறான மாற்றங்கள் - வசனம் 15

"மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும்

பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள், அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் (கெஹன்னா) மகனாக்குகிறீர்கள்."

இருதயங்களையும் மனங்களையும் நீதியைப் போற்ற அழைக்காமல், புதிதாக வந்தவர்களை தங்கள் நிலையைப் போன்ற ஒரு நிலைக்குக்கும் அதைவிட மோசமான நிலைக்கும் கொண்டு வந்தார்கள். தேவனைப் பற்றிய அறிவினாலும் மற்றும் அவர் எதற்காக நிற்கிறார் என்பதைப் பற்றிய நீதியானது ஒரு பாவியின் வாழ்க்கை அழகான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். ஆனால் பரிசேயர்கள் தேவனை தவறாக சித்தரித்தனர். ஜனங்களின் மனங்களைத் திறந்து அவர்களை உயர்த்தி, தேவனிடம் நெருங்கி வரச் செய்யும் உண்மையான மனமாற்றத்தை அவர்கள் தவறவிட்டது சோகமாக இருந்தது. அதற்கு பதிலாக, பரிசேயர்கள் ஜனங்களுக்கு சுய நீதியான ஒழுக்கத்தை கற்பித்தார்கள்.

இவ்வாறு, அவர்களின் மதம் தேவனை பின்பற்றுபவர்களை உருவாக்காமல், அவர்களை பின்பற்றுபவர்களை கொண்டு வந்தது.

## மூன்றாவது ஐயோ - குருட்டுத்தன்மை - வசனங்கள் 16-22

"குருடரான வழிகாட்டிகளே, உங்களுக்கு ஐயோ, எவனாகிலும் தேவாலயத்தின்பேரில் சத்தியம்பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும் எவனாகிலும் தேவாலயத்தின் பொன்னின்பேரில் சத்தியம்பண்ணினால் அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள். மதிகேடரே, குருடரே,எது முக்கியம், பொன்னோ, பொன்னைப் பரிசுத்தாக்குகிற தேவாலயமோ? (வசனம் 16,17)



*The gold of the temple is not the true value*

இங்கு, பரிசேயர்கள் எப்படி இடைவிடாமல் நுட்பமான காரியங்களில் கவனம் செலுத்தினார்கள் என்பதை இயேசு விவரித்தார். உதாரணமாக, சில விஷயங்களில் மட்டுமே சத்தியம் செய்வது பொருத்தனையை உறுதிப்படுத்தும். அதாவது ஆலயத்தின் பொன்னின் மீது சத்தியம் செய்யலாம், ஆனால் ஆலயத்தின் மீது அல்ல என்று அவர்கள் கற்பித்திருந்தார்கள். அவர்கள் பலிபீடத்தின் மேல் இருந்த பலியைக் காட்டிலும் பலிபீடத்தின் மீது சத்தியம் செய்தார்கள்.

இந்த எடுத்துக்காட்டுகள் தேவனை வணங்குவதை விட அர்த்தமற்ற நடைமுறைகளில் கவனம் செலுத்துகின்றன என்பதை சுட்டிக்காட்டுகின்றன. அவர்களின் இருதயம் தொடர்ந்து வாடிக்கொண்டிருக்கும் போது, இது மற்றொரு கருத்தியல் விவாதமாக இருந்தது.

சத்தியம் செய்வதைப் பற்றிய விவாதத்தில் அப்போஸ்தலனாகிய யாக்கோபு சில நுண்ணறிவை வழங்குகிறார். "விசேஷமாய், என் சகோதரரே, வானத்தின் பேரிலாவது, பூமியின் பேரிலாவது,

வேறெந்த ஆணையினாலாவது சத்தியம் பண்ணாதிருங்கள், நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்." (யாக்கோபு 5:12)

ஜனங்கள் சொல்லும் எல்லாவற்றிலும் நேர்மையாக இருந்தால், அவர்களின் உண்மைத்தன்மைக்கு சத்தியம் செய்வது தேவையற்றதாகிவிடும். அத்தகைய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை பரிசேயர்கள் புரிந்து கொள்ளவில்லை.

### நான்காவது ஐயோ - தேவையான விஷயங்களைத் தவிர்த்தர் - வசனங்கள் 23, 24

"மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித் தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டும். குருடரான வழிகாட்டிகளே, கொசுயில்லாதபடி வடிகட்டி , ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்."

நியாயப்பிரமாணத்திற்கு அவர்களுடைய கீழ்ப்படிதல் கூட பாசாங்குத்தனத்தால் எவ்வாறு களங்கப்படுத்தப்பட்டது என்பதை இயேசு இங்கே அம்பலப்படுத்தினார். அவர்கள் நியாயப் பிரமாணத்திற்கான தங்கள் அர்ப்பணிப்பை வெளிப்புறமாக காண்பித்தார்கள், அதே நேரத்தில் அவர்களுடைய வாழ்க்கையில் அதற்கு சம்பந்தமில்லாமல் இருந்தது. சீரகத்திலும், ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் தசமபாகம் செலுத்தி தங்களை திருப்பதிப்படுத்தி கொண்டார்கள். அதேநேரத்தில் அவர்கள் நீதி, கருணை மற்றும் நம்பிக்கையின் முக்கியத்துவத்தை தவறவிட்டார்கள்.

பார்வைக்காக மட்டுமே மதத்தை கடைபிடிக்கும் எவரிடமும் இது ஒரு பெரிய தவறை வெளிப்படுத்தியது. இயேசுவால் வலியுறுத்தப்பட்ட நீதியான கொள்கைகளைக் கடைப்படிப்பதை விட, நீதியின் முகப்பை உருவாக்க இது பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. மதத்தின் இந்த ஆபத்தான வடிவம் போட்டி மற்றும் சுய மேம்பாட்டை ஊக்குவிக்கிறது.

ஒரு கிறிஸ்தவனின் இலக்கு உயர்ந்ததாக இருக்க வேண்டும். நாம் தெய்வீகக் கொள்கைகளை நேசிக்க வேண்டும், அவற்றை நம் வாழ்வில் இணைத்துக்கொள்ள உழைக்க வேண்டும். நம்முடைய பாசாங்குகள் சரியான முறையில் கத்தரித்து பயிற்சியளிக்கப்பட்டால் மட்டுமே நாம் கிறிஸ்துவின் சாயலுக்கு இணங்க முடியும்.

### ஐந்தாவது துன்பம் - உள்ளான ஊழல் வசனங்கள் 25, 26

"மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசையரே, உங்களுக்கு ஐயோ, போஜனபானபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள், உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும், அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. குருடனான பரிசேயனே, போஜனபானபாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு."

இயேசு இங்கு இருதயத்தின் உள் நிலைக்கும் வெளிப்புற நடத்தைக்கும் உள்ள வேறுபாட்டை காண்பித்தார். ஒரு பாத்திரத்தின் உருவகத்தின் மூலம், அவர்கள் நியாயப் பிரமாணத்தின் வெளிப்படையான மீறல்களிலிருந்து விலகியதால், அவர்கள் சுத்தப்படுத்தப்பட்டதாக நினைப்பது தவறு என்று இயேசு சுட்டிக்காட்டினார். தூய்மையின் தோற்றும் சுத்தப்படுத்தப்பட்ட இருதயத்தைக் குறிக்க வேண்டிய அவசியமில்லை. பரிசேயர்களைப் பற்றிய இந்த விமர்சனத்திலிருந்து கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய இரண்டு முக்கிய பாடங்கள் உள்ளன. முதலாவதாக, பாவம் செய்யும் மனிதர்களாகிய நாம் பாவத்திலிருந்து விலகியிருக்கும் நம்முடைய திறனை அதிகமாக மதிப்பிடுகிறோம். நமக்குள் பாவம் இல்லை என்று நம்மை நம்பவைப்பதில் அது மிக பெரிய வெற்றி அடைகிறது. (1யோவான் 1:8) இரண்டாவதாக, தேவனுடைய கொள்கைகளை நாம் வெளிப்புறமாக கடைபிடித்துக்கொண்டு, அவற்றை நம் இருதயங்களில் பின்பற்றாமல் இருக்கலாம்.

ஆனால் அது நீதியல்ல, சோதனைக்காரண் நம்மைக் கண்ணியில் சிக்க வைக்க முற்படும்போதும், அல்லது நமக்குள் பெருமை வரும் போதும், தேவன் மேல் வைக்கும் அன்பும், அந்த நீதிக்கான நம்முடைய அர்ப்பணிப்பும் மட்டுமே நம் இருதயங்களை உண்மையாக வைத்திருக்க முடியும்.

### ஆறாவது ஐயோ - வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறைகள் - வசனம் 27, 28

மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பேகாணப்படுகிறீர்கள், உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்."

நியாயப்பிரமாணத்தின் படி, மரித்தவர்களுடைய பொருட்களைத் தொடும் எவரும் தீட்டாக கருதப்படுவார்கள். எனவே, கல்லறைகளை எளிதாக கண்டு அதை விட்டு விலகிபோவதற்காக, யூதர்கள் தங்கள் கல்லறைகளுக்கு வெள்ளை அடித்தார்கள். ஒரு பாத்திரத்தின் உள்ளும் புறம்புமான உதாரணத்தை இயேசு பயன்படுத்திய போது அவர் முன்வைத்த குறிப்பைச் சுட்டிக் காட்டினார். வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறைகள் பார்ப்பதற்கு நீதியாக இருந்தாலும், பாவம் பாசாங்குத்தனத்தையும் கொண்டிருப்பது போல வேதபாரகர்களும் பரிசேயர்களும் இருக்கிறார்கள் என்று அவர் ஒப்பிட்டு பேசினார்.



*Whited sepulchers*

முந்தைய ஐயோவில், வேதபாரகர்களும் பரிசேயர்களும் சுத்தப்படுத்தப்படுவதை எவ்வாறு தவறாகப் புரிந்துகொண்டார்கள் என்பதை இயேசு விவரித்தார். இங்கு, அகத்துாய்மையைப் புறக்கணிப்பதன் விளைவு பாவமும் மரணமும் ஆகும் என்கிறார். ஆனால் வெளித்தோற்றத்தை வைத்து உலகம் தீர்மானித்தாலும், தேவன் உள்ளத்தை பார்க்கிறார். நாம் நீதியை விரும்புகிறோமா? நம்முடைய செயல்கள் தெய்வீகக் கொள்கைகளால் துாண்டப்பட்டதா? விழுந்து போன வழிகளை வேரறுக்க நம் இருதயங்களை நாம் ஆராய்கிறோமா ? கிறிஸ்துவின் சாயலில் வளர முயலும் புதிய சிருஷ்டிக்கு இவைகள் நன்மை பயக்கும் பயிற்சிகளாகும்.

### ஏழாவது ஐயோ - மற்ற கொலையாளிகளைப் போல - வசனங்கள் 29, 31

"மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளைக் கட்டி, நீதிமான்களின் சமாதிகளைச் சிங்காரித்து.... ஆகையால், தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவர்களுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள் என்று உங்களைக் குறித்து நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள்." பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளை மதிக்க வேண்டும் என்று அவர்களின் கூற்றுக்கு எதிராக இயேசு இங்கு கூறினார். அவர்கள் தீர்க்கதரிசிகளைத் துன்புறுத்திக் கொன்றவர்களுக்கு ஒப்பானவர்கள் என்பதை அவர்களின் வாழ்க்கை முறை நிரூபித்தது. அவர்கள் நம் ஆண்டவரையும் தொடர்ந்து துன்புறுத்தி, அவருடைய மரணத்தைத் தேடுவதால், விரைவில் நடக்கவிருக்கும் நிகழ்வுகள் இதை வெளியாக்கும்.

அவர்கள் தங்களை பரிசுத்தவான்கள் என்று கூறிக்கொண்டாலும், அவர்களின் செயல்கள் வேறுவிதமாக நிரூபித்தது, தெளிவாகத் தெரிந்தது. யூத தேசத்தின் மீதான தேவனுடைய தீர்ப்பு குற்றத்தின் அளவு முழுமையடைந்தவுடன் அந்த தலைமுறையின் மீது விழும்.

### வெறும் மதத்திற்கு எதிராக உண்மையான நீதியின் தோல்வி

இது மத்தேயு 23 ம் அதிகாரத்தில் இயேசுவின் பிரசங்கத்தின் இறுதி வசனங்களுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. அவர் பரிசேயர்கள் மீது மட்டுமல்ல, யூத தேசத்தின் மீதும் அவர் வழங்கிய இறுதித் தீர்ப்பு மிகுந்த வேதனையாக இருந்தது. "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்." (மத்தேயு 23:38) ஒரு தேசமான அவர்கள் அவரை நிராகரித்தனர், மனுஷருக்கான ஒளி தங்களுக்குள் நடமாடுவதைக் காணத் தவறி விட்டனர். அவர்களின் வெளிப்புறமான பக்தி, அவர்களின் இருதயங்களை தேவனிடம் கொண்டு வரவில்லை. இதற்கு பதிலாக அவர்களின் மதம், சட்டம், சடங்கு, மற்றும் பாரம்பரியம் நிறைந்ததாக இருந்தது. எனவே, மேசியாவின் பிரசன்னத்திற்கு அவர்களை இது குருடாக்கியது. அவர்களின் சொந்த இரட்சிப்புக்கான தேவையைப் பார்ப்பதிலிருந்து அது அவர்களைத் தடுத்தது. இதன் விளைவாக, ஒரு தேசமாக அவர்கள் அனுபவித்து வந்த சலுகைகள் மற்றும் இரக்கங்கள் இப்போது இழக்கப்பட்டது.

## முடிவுரை

மத்தேயு 23 ல் இயேசுவின் செய்தி பரிசீலிக்கப்படும் போது, தேவனுடைய வார்த்தையை கவனமாக படிப்பவர் அவருடைய வார்த்தைகளுக்கு இடைநிறுத்துவதை தவிர்க்க முடியாது. அவருடைய செய்தி வேதபார்கர்கள் மற்றும் பரிசேயர்களை மையமாகக் கொண்டிருந்தாலும், அவர் போற்றிய கொள்கைகள், சுவிசேஷ யுகத்தின் நீண்ட ஆண்டுகளிலும் முக்கியத்துவம் பெற்றது. அதே நேரத்தில் தேவனை விட மனிதர்களின் உறுதிமொழியைத் தேடும் மாம்சத்தின் விருப்பமும் மாறவில்லை.

பரிசேயர்கள், மனித கனத்தை விரும்பி, அவர்களின் பாரம்பரியங்களை தேவனுடைய கட்டளைகளுக்கு மேலாக உயர்த்தியது. அத்தகைய போக்கில் நாம் போகாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நாம் ஒவ்வொருவரும் இந்த அடிப்படைப் படிப்பினைகளை மனதில் கொண்டு அவற்றிலிருந்து கற்றுக் கொள்வோம்.

தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்ட அனைத்தையும் நாம் மனப்பாடம் செய்யலாம், ஆனால் அவைகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவில்லை என்றாலும், நாம் அவைகளின் படி வாழவில்லை என்றாலும், அவைகளினால் நாம் தேவனை அறியவில்லை என்றாலும், அவைகள் தங்கள் நோக்கத்தை நம்மிடம் நிறைவேற்றுவதில்லை. முதல் வருகையின் போது இயேசு தனது சொந்த மக்களால் பெருமளவில் நிராகரிக்கப்பட்டதைப் போலவே, அவருடைய இரண்டாம் வருகையின் தொடக்கத்திலிருந்து அவர் பெரும்பாலும் நிராகரிக்கப்படுவார், அல்லது குறைந்தபட்சம் கிறிஸ்தவர்களால் அங்கீகரிக்கப்படமாட்டார்.

அவருடைய முதல் வருகையில் யூத மதத் தலைவர்கள் தேவனிடத்தில் பணிவையும், தாழ்மையையும் வளர்த்துக் கொள்ள தவறிவிட்டனர். இது அவர்கள் மேசியாவை அங்கீகரிப்பதிலிருந்து தடுத்தது. அதேபோல, இன்று பலர் பாரம்பரியத்தினாலும், விசுவாச அறிக்கைகளினாலும் குருடாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் இருதயங்கள் பெரும்பாலும் தேவனுக்கு பதிலாக மனிதர்களின் உறுதிமொழியை நாடுகின்றது.

உண்மையான நீதியை விட வெறும் மதத்தின் பொறிகளை (கண்ணிகள்) விரும்புபவர்கள் இந்த நேரத்தில் சபைக்கு வழங்கப்படும் ஏற்றகால போஜனங்களின் ஆசீர்வதங்களைப் பெற மாட்டார்கள். நாம் இந்த குறுகிய பாதையில் நடக்கும் போது, கிறிஸ்துவின் கொடியை பிடித்து கொண்டு, அவர் பாதங்களில் நம் பாரங்களை வைத்து விட்டு, அவருடைய சத்தியத்தால் நம் இருதயங்களும், மனங்களும் வழிநடத்தப்பட்டு, வடிவமைக்கப் படுவதற்கு நாம் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.



*Continue walking in the Narrow Way*

துளிர்த்தல்

# அத்திமரம் - கால ஓட்டத்தில் ஒரு நங்கூரம்



***Dave Larson***

"அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள், அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும் போது, வசந்த காலம் சமீபமாயிற்று என்றுஅறிவீர்கள்.." (மத்தேயு 24:32)

மனுக்குலத்திற்கான தேவனுடைய திட்டத்தைப் பற்றிய தற்போதைய காலப் பகுதியைப் பகுத்தறியும் திறன் அவரைப் பின்பற்றுபவர்களுக்கு நீண்ட காலமாக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. தற்போதைய சுவிசேஷ யுகம் நெருங்கி வருவதால், இதற்கான தேவை இன்னும் முக்கியமானதாகிவிட்டது.

இயேசு தனது ஊழியத்தின் போது, யுகத்தின் முடிவைப் பற்றியும், தேவனைப் பின்பற்றுபவர்கள், இனி நடக்கபோகிற மாற்றத்தைப் பற்றி அடையாளம் கண்டு கொள்வதற்கான முக்கியத்துவத்தைப் பற்றியும் தம் சீஷர்களிடம் விரிவாகப் பேசினார். இந்த கடினமான காலங்களில் ஆவிக்குரிய வாழ்க்கையில் வலுவாக இருக்க வேண்டியதன் அவசியத்தை அவர் மேலும் பேசினார். இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் இடையே நடந்த அத்தகைய தொடர்பு மத்தேயு 24,25 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (மத்தேயு 24 முதன்மையாக குறிப்பிடப்பட்டாலும், அதே நிகழ்வின் பெரும்பகுதி மாற்கு 13 மற்றும் லூக்கா 21 வில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது நினைவில் கொள்ளவேண்டும்)

### யுகத்தின் முடிவில் நடக்கும் கடுமையான பிரச்சனைகள்

எருசலேமிற்குள் நுழைந்த சிறிது நேரத்திலேயே இயேசுவும் அவருடைய சீஷர்களும் கோவிலுக்குச் சென்றனர். அதன்பிறகு, ஆலயத்தின் அழிவை முன்னறிவித்த தீர்க்கதரிசனங்களைப் பற்றி இயேசு பேசினார். பின்னர், சில சீஷர்கள் இந்த தீர்க்கதரிசனங்கள் எப்போது நிறைவேறும் என்பதையும், யுகத்தின் முடிவு வந்துவிட்டது என்பதை அவருடைய சீஷர்கள் எப்படி அறிவார்கள் என்பதையும் விளக்கும்படி இயேசுவிடம் கேட்டார்கள். (மத்தேயு24:13)



*The fig tree represents Israel*



Israel has been restored, nationally

சுவிசேஷ யுகத்தின் முடிவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள், உவமைகள், எச்சரிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றின் கலவையுடன் இயேசு அவர்களின் வேண்டுகோளுக்கு பதிலளித்தார். மனுக்குலத்தின் வரலாறு முழுவதும், இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகள் எப்போதும் நடந்துக் கொண்டிருந்தது. போர்கள் மற்றும் போர்களின் (வாந்திகளால்) வரலாறு நிறைந்துள்ளது. மனிதன் பல பொய்யான தேவர்களை நிறுவினான். தனிநபர்கள் தங்களை தேவனுடைய பிரதிநிதிகளாக தவறாக அமைத்துக்கொண்டனர். பூகம்பங்களும் மற்ற இயற்கை பேரழிவுகளும் ஏற்பட்டுள்ளது. அரசியல் மற்றும் சமூக எழுச்சி போன்ற பல அடையாளமான பூகம்பங்களும் ஏற்பட்டது.

இருப்பினும், யுகத்தின் முடிவைப் பற்றிய இயேசுவின் வார்த்தைகளில் சொல்லப்பட்ட நிகழ்வுகள், சொல்லர்த்தமாகவோ அல்லது அடையாளமாகவோ, மிகவும் தீவிரமானதாகவும், பரவலாகவும் காணப்படும், மேலும் அவைகள் தேவனுடைய உண்மையுள்ள சீஷர்களையும் கூட ஏமாற்றப்படும் அபாயத்தில் இருப்பார்கள் என்று சுட்டிக்காட்டுகிறது. (மத்தேயு 24:431)

யுகத்தின் முடிவில் நிகழும் என்று கணிக்கப்பட்ட பலமான ஏமாற்றங்களுடன் கூடிய விரைவான மாற்றத்தின் அளவைக் கருத்தில் கொள்ளும் போது, தேவனுடைய ஜனங்கள் கால ஓட்டத்தில் நங்கூரமிடவும், அவர்களின் நம்பிக்கையை வலுப்படுத்தவும் சமமான வலுவான அடையாளங்கள் தேவைப்படும் என்று சொல்லப்படுகிறது.

அத்தி மரத்தை அடையாளப்படுத்தும் இஸ்ரயேல் தேசமே அத்தகைய குறிப்பாக இருக்கும் என்று இயேசு கற்பித்தார்.

### அத்தி மரத்தின் வரிசை

எருசலேமுக்குள் நுழைவதற்கு முன்பு, இயேசு அத்தி மரத்தைப் பற்றிய உவமையைச் சொன்னார். லூக்கா 13:69இல் பதிவு செய்யப்பட்ட இந்த உவமை, திராட்சைத் தோட்டத்தின் உரிமையாளரின் வழிகாட்டுதலின்படி ஒரு திராட்சைத் தோட்டத்தில் நடப்பட்ட ஒரு அத்தி மரத்தை சித்தரிக்கிறது. மூன்று வருடங்களுக்குப் பிறகு, உரிமையாளர் மரத்தில் பழம் இல்லை என்பதை கண்டார். பின்னர் அவர் திராட்சைத் தோட்டக்காரனை தேடி, அத்திமரம் பழம் விளைவிக்காததால் அதை வெட்டச் சொன்னார். அத்தி மரம் இன்னும் ஒரு வருடம்

இருக்க அனுமதிக்குமாறு தோட்டக்காரர் உரிமையாளரிடம் கோரினார். தோட்டக்காரர் அந்த அத்திமரத்திற்கு சிறப்பு கவனம் செலுத்துவார். ஒரு வருடம் சென்ற பின், மரத்தில் பழங்கள் விளைந்தால் பழத்தின் உரிமையாளரின் ஆசை நிறைவேறும். மரம் தரிசாக இருந்தால், சொன்னபடி வெட்டப்படும்.

அத்திமரம் இஸ்ரயேல் தேசத்தைக் குறிக்கிறது. உரிமையாளரின் திராட்சைத் தோட்டத்தில் மரத்தின் மூன்று வருடங்கள் இயேசுவின் பூமிக்குரிய ஊழிய காலத்தை குறிக்கிறது. அந்நாட்களிலே, அவர் இஸ்ரயேல் ஜனங்களிடையே பண்புள்ள வளர்ச்சியையும், விசுவாசத்தையும் தேடினார்.

அத்திமரம் மத்தேயு 21:1921லும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சம்பவம் இயேசு எருசலேமிற்குள் நுழைந்த பிறகும், மத்தேயு 24ல் உள்ள நிகழ்வுகளுக்கும் சற்று முன்பும் நடைபெற்றது. இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஒரு அத்தி மரத்தின் கீழ் வந்தார்கள், அந்த மரத்தில் பழங்கள் காணப்படாமல், இலைகள் மட்டுமே இருந்ததை இயேசு கவனித்தார். பழம் இல்லாததால் அந்த அத்தி மரத்தை இயேசு சபித்தார், உடனே மரம் காய்ந்தது. இனி அந்த மரம் எந்தப் பழமும் "இனிமேல் விளைவிக்காது" என்று இயேசு கட்டளையிட்டார் என்று சில மொழிபெயர்ப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. (மத்தேயு 21:19) அதே நேரத்தில் RVIC போன்ற மற்ற மொழிபெயர்ப்புகள், "இந்த யுகம் வரை" அல்லது "இந்த யுகத்தில்" என்றும் மொழிபெயர்க்கப்படலாம் என்பதைக் குறிக்கிறது. இந்த சம்பவம் லூக்கா 13ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட உவமையில் முன்னர் சித்தரிக்கப்பட்ட அத்தி மரத்தின் விதியை சுட்டிக்காட்டுகிறது.

சுவிசேஷ யுகத்தின் பெரும்பகுதி முழுவதும், இஸ்ரயேல் ஒரு தேசமாக இருக்கவில்லை. இதன் விளைவாக இஸ்ரயேல் தேசம் "இந்த யுகத்தில்" பலன் தராது. இந்த நிலையில் ஏற்படும் எந்த மாற்றமும் யுகம் முடிவடைகிறது என்பதற்கான அறிகுறியாக நியாயமான முறையில் புரிந்து கொள்ள முடியும்.

## மற்றொரு அத்தி மரத்தின் உவமை

யுகத்தின் முடிவைப் பற்றி இயேசு விவாதிரித்தபோது, அத்தி மரத்தைப் பற்றிய மற்றொரு உவமையைச் சொன்னார். மத்தேயு 24:3236ல், இயேசு "இளங்கிளை தோன்றி, துளிர் விடும்" ஒரு அத்தி மரத்தை பற்றி விவரித்தார். அதாவது அத்தி மரம் ஒரு செயலற்ற காலத்திலிருந்து விழித்து, இழந்த உயிர்ச்சக்தியை மீண்டும் பெறுகிறது.

முந்தைய இரண்டு சித்தரிப்புகளின்படி, அத்தி மரமானது, முதலில் உரிமையாளரின் திராட்சை தோட்டத்தில் ஒரு பலனற்ற மரமாகவும், பின்னர் "இந்த யுகத்தில்" சபிக்கப்பட்ட மரமாகவும் காண்பிக்கப்படுகிறது. ஆனால் இந்த உவமையில் உள்ள அத்தி மரம் சுவிசேஷ யுகத்தின் முடிவில் அதன் "சாபத்திலிருந்து"விடுபடுவதை காணலாம். மொத்தத்தில் இந்த மூன்று உவமைகளும் சேர்ந்து இஸ்ரயேலின் வரலாற்றின் முதல் வருகை முதல் இன்றைய நாள் வரைக்கும் உள்ள ஒரு இணக்கமான

சித்திரத்தை வரைகின்றது.

"கோடை காலம் நெருங்கிவிட்டது" என்பதற்கான அடையாளமாக இந்த உவமையை இணைப்பதன் மூலம் இஸ்ரயேல் புத்துயிர் பெறுவதை, இந்த யுகம் முடிவை நோக்கி நெருங்கி வருவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க அடையாளமாக இருக்கும் என்பதை இயேசு சுட்டிக்காட்டினார். "இவைகளை நீங்கள் காணும் போது, அது சமீபமாயிருக்கிறது என்று அறிந்துகொள்ளுங்கள்" என்ற அறிவிப்போடு அவர் உவமையை முடிக்கிறார். இன்னும் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், இவைகள் நடப்பதைக் காணும் தலைமுறை "இவை அனைத்தும் நிறைவேறும் வரை கடந்து போகாது"

1914 இல் புறஜாதிகளின் காலத்தின் முடிவில், யூத ஜனங்கள் தங்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு மீண்டும் கூடி, இஸ்ரயேல் தேசம் மீண்டும் ஸ்தாபிக்கப்படுவதை மனுக்குலம் கண்டது. தொடர்ந்து வரும் ஆண்டுகளில், இஸ்ரயேல் விரிவடைந்து, செழிப்பாகவும், செல்வாக்காகவும் வளர்ந்து வருகிறது. இந்த வளர்ச்சியில், செயலற்ற அத்திமரம் துளிர்விட்டு வளரத்தொடங்கும் சித்திரம் எளிதாகக் காணப்படுகிறது.

இந்த நிகழ்வுகளின் வெளிப்பாடு, அதாவது "அத்திமரம் துளிர்விடுவது" என்பது, வேதங்களைப் படிப்பதன் மூலம் விழிப்புடன் இருக்கும் தேவனைப் பின்பற்றுபவர்களுக்கு சுவிசேஷ யுகத்தின் முடிவைக் குறிக்கும் தெளிவான அடையாளமாக உள்ளது.

## விசுவாசம் மற்றும் விழித்திருப்பதற்கான தேவை

தேவனுடைய திட்டத்தின் நிகழ்வுகள் வெளிவரும்போது, குறிப்பாக யுகத்தின் முடிவில், விழிப்புடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை இயேசு தொடர்ந்து வலியுறுத்தினார். யுகத்தின் முடிவு, தமக்கு ஊழியம் செய்ய முற்படுபவர்களுக்கு பல கஷ்டங்களை உருவாக்கும் என்பதை தேவன் தம்முடைய ஞானத்தில் அறிந்திருந்தார். ஆனால் யுகத்தின் முடிவை மனுக்குலத்தின் இயலாமையினால் அடையாளம் கண்டுகொள்ள முடியாது. (மத்தேயு 24:37, 43) வலுவான வஞ்சனைகள், விரைவான எழுச்சிகள் மற்றும் மாற்றங்களுடன் இணைந்து, அனைத்தும் முயற்சித்து, "கூடுமானால், தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கும்.(வசனம் 24) ஆனால் உண்மைத்தன்மைக்கான தேவனுடைய தராதரங்கள் மாறாத அளவுக்கு உயர்ந்தவையாக இருக்கின்றது.

தம்மைப் பின்பற்றுபவர்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்காக, அடையாளமாக இஸ்ரயேலின் மறுசீரமைப்பை அவர்கள் காணும்படி கிருபை செய்த தேவனுடைய எல்லையற்ற ஞானத்திற்கு நன்றி செலுத்துவோம்.

"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை." (புலம்பல்3:22)

### இன்று காணக்கூடிய
# உங்கள் பிரசன்னத்தின் அடையாளங்கள்



"இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்."(மத்தேயு 24:3)

ஆலயத்தில் பிரசங்கித்த பிறகு, சீஷர்கள் இயேசுவுக்கு ஆலய வளாகத்தின் அழகான கட்டிடங்களைக் காட்ட விரும்பினார்கள். முதலில் செருபாபேலால் மீண்டும் கட்டப்பட்ட ஆலயம் (எஸ்றா 6:15)பின்பு ஏரோது இராஜாவால் பெரிதாகவும், விரிவாகவும் மேம்படுத்தப்பட்டது. இது கிட்டத்தட்ட 1000 ஆண்டுகளாக யூத வழிபாட்டின் மையாகமாகவும், எளிதாக ஈர்க்கக் கூடியதாகவும் இருந்தது. "உங்கள் வீடு உங்களுக்கு பாழக்கிவிடப்படும்" (மத்தேயு 23:38) என்று இயேசு எருசலேமைப் பற்றி கூறியதை சீஷர்கள் கேட்டிருந்தார்கள். ஆலயத்தின் பல்வேறு அம்சங்களை இயேசுவுக்குக் காண்பிப்பதன் மூலம், முன்னறிவிக்கப்பட்ட அழிவு, இந்த அழகிய வழிபாட்டு ஸ்தலத்தை உள்ளடக்காது என்று அவர்கள் நம்பியிருக்கலாம். இருப்பினும், ஆலயமும் தப்புவதில்லை என்பதை இயேசு தெளிவாகக் கூறினார். "இயேசு அவர்களை நோக்கி - இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."(மத்தேயு24:2)

பின்னர் அவர் ஒலிவ மலையில் அமர்ந்தபோது, சில சீஷர்கள் அவரிடம் தனிப்பட்ட முறையில் மூன்று முக்கியமான கேள்விகளைக் கேட்டார்கள். "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்."அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப் படுவதற்கு முன், நீண்ட இடைப்பட்ட காலம் இருப்பதைப் பற்றி சீஷர்கள் அறிந்திருக்கவில்லை. "நான் போகவேண்டும்" என்று இயேசு அவர்களிடம் சொன்னபோது அவர்கள் ஆச்சரியப்பட்ட எதிர்வினையால் இது தெளிவாகிறது. (யோவான் 16:7,1619) அவர்களின் வாழ்நாளில் அவருடைய இராஜ்யம் நிறுவப்படும் என்றும் தற்போதைய தீய உலகின் முடிவு நெருங்கிவிட்டது என்றும் அவர்கள் வெளிப்படையாக எதிர்பார்த்தனர்.

### ஆரம்ப எதிர்பார்ப்புகள்

ஒரு முழுமையற்ற புரிதலின் காரணத்தினால், இந்த எதிர்பார்ப்புகள் நியாயமற்றவை அல்ல. இருப்பினும், இராஜ்யம் வெகு தொலைவில் இருப்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று இயேசு இப்போது விரும்பினார். பலர் தங்களை கிறிஸ்து என்று பொய்யாகக் கூறிக்கொண்டு வருவார்கள் என்ற எச்சரிக்கையுடன் தொடங்கினார்.



*Not one stone would remain upon another*

பல யுத்தங்கள் மற்றும் "யுத்தங்களின் செய்திகள்" தொடரும். ஆனால் அந்த நிகழ்வுகள் இந்த உலகத்தின் முடிவைக் குறிக்காது.

தம்மைப் பின்பற்றுபவர்கள் துன்புறுத்தப் படுவார்கள், பொய்யான தீர்க்கதரிசிகள் பலரை ஏமாற்றுவார்கள் அன்பு "தனிந்து" போகும் என்று அவர் மேலும் கூறினார்.(வசனம்12) இந்த யுகத்தின் முடிவுக்கு முன், இராஜ்யத்தின் சுவிசேஷம் எல்லா தேசங்களுக்கும் பிரசங்கிக்கப்படும்.

தானியேலின் தீர்க்கதரிசனத்தில் உரைக்கப்பட்ட பாழாக்கும் அருவருப்பானது அதிகாரத்தில் நிலைநிறுத்தப்படும் என்று இயேசு கூறினார். இந்த தீர்க்கதரிசனம் யுகத்தின் முடிவை நெருங்குகையில், உலகம் இதுவரை கண்டிராத (வசனம் 21) பெரும் உபத்திரவத்தைப் பற்றிய மேலும் எச்சரிக்கைகளைச் சேர்த்து கூறினார். மேலும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் கூட வஞ்சிக்கப் படத்தக்கதாக, பொய்யான கிறிஸ்துக்கள் அவர்களை தவறாக வழிநடத்துவார்கள். இப்படிப்பட்டவர்களை நம்பாதிருங்கள் என்று இயேசு எச்சரித்தார். (வசனம்26)

### வாக்களிக்கப்பட்ட அவருடைய திரும்புதல்

பின்வரும் வசனங்களில் இயேசு தாம் இரகசியமாகத் திரும்புவதைப் பற்றிய அர்த்தமுள்ள விளக்கத்தை அளித்தார். "மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் [G3952, parousia,]இருக்கும்.பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்." மின்னல் என்பது வளிமண்டலத்தில் ஒரு மின் வெளியேற்றம் ஆகும். இது இயேசு விவரித்த மாதிரி பயணிப்பதில்லை. "மின்னல்" (G796அஸ்ட்ரேப்) என்று மொழிபெயர்க் கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "சூரிய ஒளி" அல்லது பிரகாசமான ஒளி" என்ற மொழிபெயர்க்கப பட்டுள்ளது. RVIC மொழிபெயர்ப்பு 27ம் வசனத்தின் துல்லியமான பொருளை வழங்குகிறது.

"ஏனென்றால், உதிக்கும் சூரியன் கிழக்கிலிருந்து புறப்பட்டு, மேற்கு வரை தெரிவது போல, மனுஷகுமாரனுடைய பிரசன்னமும் அப்படியே இருக்கும்.சூரியன் கிழக்கில் உதிக்கும்போது, இயேசு விவரித்தபடி அதன் கதிர்கள் மேற்கு நோக்கிச் செல்கிறது. அவர் திரும்பி வருவதை, காலை உதிக்கும் சூரியனோடு ஒப்பிடுகிறார்.

சூரியன் வெப்பத்தை தருகிறது. தாவரங்கள் ஊட்டச்சத்துக்களை செயலாக்க உதவுகிறது. வாழ்க்கைக்கான அதன் நன்மைகள் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பூமியில் பெரும்பாலான உயிர்கள் அது இல்லாமல் இருக்க முடியாது. இந்த நன்மைகளுக்கான தொடர்பு, இயேசு தனது வருகையை சூரிய உதயம் என்று விவரித்ததற்கு ஒரு காரணமாக இருக்கலாம். அவருடைய இரண்டாம் வருகையின் விளைவுகள் தீர்க்கதரிசனமாக இரண்டு வெவ்வேறு வழிகளில் விவரிக்கப்பட்டுள்ளது. "இதோ, சூளையைப் போல எரிகிற நாள் வரும், அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள், வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும், அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று



*The saints will be as eagles gathered for dining*



*Jesus, teaching his disciples*

சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும், அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும், நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்." (மல்கியா4:1,2)

பெருமையுள்ளவர்களும் பொல்லாதவர்களும் தங்கள் செயல்களை நுகர்வார்கள், அதே சமயம் தேவனை மதிக்கிறவர்கள் கர்த்தரின் வருகை மற்றும் அவருடைய இராஜ்யத்தின் பெரும் ஆசீர்வாதங்களில் பங்கு பெறுவார்கள். இரண்டு விளைவுகளும் மனுக்குலத்தை உயர்த்தும்.

அவர் தமது திரும்புதலை சூரிய உதயத்திற்கு ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம், இயேசு தனது வருகையின் ஆரம்ப கட்டங்கள், தீர்க்க தரிசனங்களை வெளிப்படுத்துவதில் விழித்திருப்பவர்கள் மட்டுமே உலக காரியங்களில் அவரது ஈடுபாட்டைப் புரிந்துகொள்வார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார். அவர் தமது ஆவிக்குரிய ஆலயத்தை கட்டி முடிக்கும்போது சாத்தானின் சாம்ராஜ்யத்தை உடைப்பார். அவரது இரகசிய பிரசன்னம் பற்றிய அறிவும், நிறைவேற்றப்படும் பணியும் பரிசுத்தவான்கள் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. நம்முடைய ஆண்டவரின், திரும்பியதன் நோக்கத்தையும் பணியையும் புரிந்துகொள்வது, இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் அவர்களிடமிருந்து என்ன எதிர்ப்பார்க்கப்படுகிறது என்பதை சகோதரர்கள் அறிந்துகொள்ள உதவுகிறது.

### கழுகுகள் ஒன்று கூடும்

அவர் இரகசியமாக திரும்பியதை விவரித்த பிறகு, "பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்." என்று இயேசு கூறினார். (வசனம் 28) இது சூரிய உதயத்தின் ஒப்புமையிலிருந்து தனித்து விடப்பட்டதாக தோன்றலாம். கழுகுகள் காற்றின் ஓட்டத்தில் பறக்கும் போது, சுதந்திரத்தின் அடையாளமாக போற்றப்படுகின்றது. அவர்களின் அற்புதமான கண் பார்வை இரண்டு மைல் தொலைவில் இருந்தும் இரையை கண்டுபிடிக்க உதவுகிறது. யுகத்தின் முடிவில் பரிசுத்தவான்களை சித்தரிக்க இயேசு கழுகுகளைப் பயன் படுத்தியதற்கான காரணங்களில் இந்தக் குணங்களாக இருக்கலாம்.

நம்முடைய ஆண்டவரின் திரும்புதல், வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தின் வெள்ளத்துடன் இருக்கிறது. தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய விரும்பி, "அவளை விட்டு வெளியே" (வெளிப்படுத்துதல் 18:4) வருபவர்களுக்கு தேவனுடைய திட்டத்தின் அறிவு, பரிசாக

வழங்கப்படுகிறது. பெயரளவிலான கிறிஸ்தவ தேவாலய அமைப்புகளை விட்டு வெளியேறுவது பலருக்கு கடினமாக உள்ளது. இது பெரும்பாலும் குடும்பங்களையும் நண்பர்களையும் பிரிக்கிறது. ஆனால் தேவனுடைய அழைப்புக்கு செவிகொடுத்தவர்கள் மற்றவர்கள் பெறாத ஆவிக்குரிய தரிசனத்தைப் பெற்றுள்ளனர்.

தவறான கோட்பாடுகளின் சங்கிலிகளிலிருந்து விடுபட வேண்டும் என்ற அவர்களது ஆசை, தேவனுடைய வார்த்தையைப் படிப்பதில் பலரை ஒன்றாகச் சேர்க்க வழிவகுத்தது. ஏற்றகால சத்தியம் பரிசுத்தவான்களின் இருதயங்களில், தூய்மையை அதிகரித்துள்ளது. மீட்கும் பலி மற்றும் பாவநிவாரண பலியைப் புரிந்துகொள்வது, பலரைத் தூண்டியது. அவர்கள் தேவன் மீதான பக்தியை ஆழப்படுத்தியுள்ளது.

நம்முடைய கர்த்தரின் பிரசன்னம் மரித்துகொண்டிருக்கும் இந்த உலகத்திற்கு மறுசீரமைப்பைக் கொண்டுவருகிறது என்ற அறிவு, பக்தி வைராக்கியமுள்ள ஊழியர்களை தட்டி எழுப்பியுள்ளது. மேலும் அத்தகைய நம்பிக்கை இருதயத்தை பலப்படுத்துகிறது.

இன்று வெளிவரும் நிகழ்வுகள் நாம் தேவனுடைய இராஜ்யத்தின் வாசலில் இருக்கிறோம் என்பதற்கான அடையாளங்களாக இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு ஒன்று திரட்டி இயேசு விவரித்த சத்தியத்தின் மாபெரும் எக்காளம் ஒலித்தது, இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. இந்த யுகத்தின் முடிவில் வாழ்வதும், நம் ஆண்டவரின் பிரசன்னத்தின் பல அடையாளங்களைக் காண்பதும் ஒரு அசாதாரணமான பாக்கியமாகும். பெயரளவிலான அமைப்புகளில் இருந்து வெளியேறி, தனிப்பட்ட திருச்சபைகளுக்குள் சகோதரர்கள் கூடுவது நம்முடைய ஆண்டவரின் பிரசன்னத்தின் (பரோஷியா) ஒரு அறிகுறியாகும்.

**அத்திமரம்**

"அத்திரமத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள், அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும் போது, வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும் போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள். இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத்தேயு 24:3234)

இந்த உவமையின் பொருள் பெருபாலும் எரேமியா 24ன் வசனங்களோடு இணைக்கப் பட்டுள்ளது. அங்கு தீர்க்கதரிசி பழைய மாம்ச இஸ்ரயேலில் இரண்டு வகை ஜனங்களை விவரிக்கும் போது, அவர்களை "நல்ல அத்திப்பழங்கள்" மற்றும் "கெட்ட அத்திப்பழங்கள்" என்று பேசுகிறார். (வசனம் 2)தேவன் நல்ல அத்திப்பழங்களுக்கு ஒரு உறுதியான வாக்குத்தத்தத்தை அளிக்கிறார்.

"அவர்களுக்கு நன்மையுண்டாக நான் என் கண்களை அவர்கள்மேல் வைத்து, அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பிவரப்பண்ணி, அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களைப் பிடுங்கமாட்டேன்.நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக்கொடுப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள்தேவனாயிருப்பேன், அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும்புவார்கள் என்று இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்." (வசனம் 6-7)

இந்த வாக்குறுதி பல நூற்றாண்டுகளுக்கு முன்பே செய்யப்பட்டிருந்தாலும், தேவன் மறக்கவில்லை. அவருடைய வார்த்தைகள் இப்போது நிறைவேறி வருகின்றது. அதன் தற்போதைய போராட்டங்கள் இருந்தபோதிலும், இஸ்ரயேல் மீண்டும் தனது தேசத்தில் இருந்து

பறிக்கப்படாது. பூத்துக் குலுங்கும் அத்தி மரம், தேவனுடைய இராஜ்யம் "வாசலில்" இருப்பதைக் குறிக்கிறது.

"இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு சொன்னார். (மத்தேயு 24:34) இந்தத் தலைமுறை தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிப்பதைக் காணும் என்பதற்கான அறிகுறியே, இஸ்ரயேல் தேசத்தின் மறுபிறப்பாகும்.

ஒரு தலைமுறையின் துல்லியமான அளவை நாம் எடுத்துகொள்ளாமல், இராஜ்யம் விரைவில் முழுமையாக நிறுவப்படும் என்று நாம் நம்பலாம்."வானமும் பூமியும் (தற்போதைய தீமையான உலகம்) ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" என்று இயேசு கூறினார். (வசனம 35)

ஒரு திருடனைப் போல

இயேசு இரகசியமாகத் திரும்பியதற்கான காரணத்தை விவரிக்கிறார். "திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிட வொட்டானென்று அறிவீர்கள்.நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார், ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்." (மத்தேயு 24:43, 44)

இந்தப் பொல்லாத உலகத்தின் எஜமான் சாத்தான் .(2 கொரிந்தியர் 4:4) இயேசு ஒரு திருடனைப் போல திரும்பியதால், சாத்தானால் அதற்கு ஆயத்தமாக இருக்க முடியவில்லை. நம்முடைய ஆண்டவர் திரும்பி வருவதை அவன் அறிந்திருந்தால், சாத்தான் எவ்வாறு ஆயத்தமாக இருந்திருப்பான் என்பதை நாம் அறிய முடியாது. ஒருவேளை அவன் நம்முடைய கர்த்தருடைய வேலையின் நில அம்சங்களை தாமதப் படுத்தியிருக்கலாம். ஆனாலும் தற்போதைய ஒழுங்கு முறையைப் பாதுகாப்பதில் சாத்தான் வெற்றி அடைய மாட்டான் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம்.

"ஏனிகளுக்கு நமது ஆண்டவரின் அறிவுரை வெளிப்படுத்துதல் 16:15ல் கொடுக்கப்பட்டுள்ளது. "இதோ, திருடனைப் போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்." நம்முடைய வஸ்திரங்களை சுத்தமாக வைத்திருப்பதற்கு தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும்.

இந்த உலகம் எண்ணற்ற கவனச் சிதறல்களை வழங்குகிறது. ஆனால் ஆவிக்குரிய ஞானமுள்ளவர்கள் தங்கள் அர்ப்பணிப்பின் பொருத்தனைகளில் இருந்து தங்கள் கவனத்தை சிதறவிட மாட்டார்கள். மற்றும் கிறிஸ்துவின் காரணத்திற்காக தொடர்ந்து பணியாற்றுவார்கள்.

ஒரு உண்மையான ஊழியக்காரன்

மத்தேயு 24 45 ம் வசனத்தில், "உண்மையும் விவேகமும் உள்ள ஊழியக்காரன்" என்று இயேசு விவரிக்கிறார். இவர் "ஏற்ற வேளையில் போஜனம் கொடுப்பதற்காக" கர்த்தர் பயன்படுத்துவார். சகோதரர் ரசலின் ஊழியம் இதை நிறைவேற்றுவதாக பெரும்பாலான வேதமாணவர்களால் பார்க்கப்படுகிறது. அவருடைய ஊழியத்தின் மூலம் கர்த்தர் குறிப்பாக இந்த யுகத்தின் முடிவில் தேவைப்படும் முக்கியமான சத்தியங்களை விநியோகித்திருக்கிறார்.

பாபிலோன் அமைப்புகளை விட்டு வெளியேறி, பிணமாகிய சத்தியத்தை உண்ண அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவருடைய அர்த்தமுள்ள பணியை நாம் அங்கீகரிப்பதும், அவருடைய உண்மையுள்ள ஊழியர் மூலம் நம் ஆண்டவர் வழங்கிய அற்புதமான உண்மைகளைத் தொடர்ந்து பகிர்ந்துகொள்வதும் இருதயப்பூர்வமான பாராட்டுக்களுடன் உள்ளது.

## முடிவு பரியந்தம் அவர்களைப் பராமரித்தார்

# இயேசுவின் பிரியாவிடை சொற்பொழிவு



**David Rice**

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்." (யோவான் 14:1)

இயேசு இந்த பூமியில் வாழ்ந்த கடைசி நாட்களில், இயேசு தம் சீஷர்களுடன் தம்முடைய பொன்னான நேரத்தை செலவிட்டார். வரப்போகும் கடினமான அனுபவங்களுக்கு அவர்களை தயார்படுத்தி, அவர்கள் பின்னர் நினைவுகூரக்கூடிய வார்த்தைகளால் ஆறுதல் கூறினார். யோவான் 13ல் அவர் மனத்தாழ்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு, ஒரு உண்மையான ஊழியக்காரனின் வாழ்க்கை முறையை நிரூபித்தார். பூமியில் நடமாடிய மிக சிறந்த மனிதர் தம் சீஷர்களின் கால்களைக் கழுவினார். தேவனால் தேடப்பட்ட இருதய நிலைக்கு இது ஒரு வல்லமையுள்ள நினைப்பூட்டலாக இருந்தது. "நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்." (யோவான்13:15, 17) என்று இயேசு கூறினார்.

பேதுரு தன் கால்களைக் கழுவுவதற்கு மறுத்தபோது, ஒரு நாள் அதை அவர் புரிந்துகொள்வார் என்று இயேசு சொன்னார். அவர் சரியாக சொன்னார். பேதுரு தன் சகோதரர்களின் கால்களைக் கழுவுவதன் அர்த்தம் என்ன என்பதை தனிப்பட்ட முறையில் அனுபவித்தார்.

அவருடைய பலியின் வாழ்க்கை ஆரம்பகால சபைக்கு ஆவிக்குரிய புத்துணர்வை அளித்தது. அவருடைய முன்மாதிரி இன்றுவரை மற்றவர்களை ஆசீர்வதிக்கிறது. சீஷர்களில் ஒருவர் தன்னைக் காட்டிக் கொடுப்பார் என்று இயேசு சொன்ன போது, அவர் யூதாஸ் பக்கம் திரும்பி, "நீ செய்யவேண்டியதை சீக்கிரம் செய்" என்றார். (வசனம் 27) மற்றவர்களுக்கு இயேசு பேசின வார்த்தைகளுக்கு அர்த்தம் புரியவில்லை, ஆனால் யூதாஸ் புரிந்துகொண்டார். இயேசுவிடமிருந்து ஒரு அப்ப துணிக்கையை வாங்கின பிறகு அவர் அங்கிருந்து வெளியேறினார். இந்த யுகத்தின் முடிவு வரைக்கும் அவர் தம்முடைய சீஷர்களுக்கு ஒரு புதிய படிநிலையை அமைக்கும் ஒரு முக்கியமான கொள்கையை இயேசு பின்னர் பகிர்ந்து கொண்டார்.



*Jesus advising his disciples at the last supper*

## ஒரு புதிய பிரமாணம்

"பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன், நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்." (யோவான்13:3335)

மோசேயின் பிரமாணங்களில் ஒன்று, "உன்னில் நீ அன்புகூருவது போல் பிறனிலும் அன்புகூருவாயாக, நான் கர்த்தர்." இவ்வாறு கூறியது. (லேவியாராகமம்19:18) இப்படியிருக்க ஒருவரை யொருவர் நேசிக்கவேண்டும் என்பது எப்படி ஒரு புதிய கட்டளையாக இருக்க முடியும்? "நான் உங்களை நேசித்தது போல" என்று இயேசு சில எளிமையான வார்த்தைகளை சேர்த்து வித்தியாசத்தை விளக்கினார். இயேசு மற்றவர்களின் நன்மைக்காக மனமுவந்து தன் உயிரை பலியாக கொடுத்தார்.

அவர் தனக்கு நெருக்கமானவர்களுக்காக மட்டுமல்ல, அனைத்து மனுக்குலத்திற்காகவும், தன்னை வெறுத்தவர்களுக்காகவும், துஷ்பிரயோகம் செய்தவர்களுக்காகவும், தன்னை இலவசமாக கொடுத்தார். அத்தகைய சுய பலியைப் பற்றி பிரமாணத்தில் எதுவும் கூறப்படவில்லை. இந்த புதிய கட்டளை ஒரு உயர்ந்த தார்மீக தரநிலையை நிறுவியது, அது மிக உயர்ந்தது. இத்தகைய இருதயத்தின் பரிசுத்தமே இயேசுவைத் தூண்டியது. மேலும் ஒவ்வொரு விசுவாசியின் முன் பாடுபடுவதற்கான இன்றியமையாத இலக்காக அது அமைக்கப்பட்டுள்ளது. இது "அகாபே அன்பின்" வெளிப்பாடாகும்.



*God's kingdom will be universal.*

இயேசு அன்பாக இருக்கவேண்டும் என்று கட்டளையிட்டதோடு, அவர் தன் வாழ்க்கையில் வாழ்ந்து காண்பித்தார். இந்தக் கொள்கையின்படி வாழ முயல்பவர்கள் தங்கள் எஜமானரின் பிரதிபலிப்பாக மாறுகிறார்கள். அவர் அத்தகைய முன்மாதிரிக்கு தகுதியானவர். இந்த அன்பை அடைவது விரும்பத்தக்கது. இதை தேவனுக்கு கீழ்ப்படிவதால் மட்டுமல்ல, அது அளிக்கும் மன அமைதிக்காகவும் விரும்பத்தக்கதாக உள்ளது.

இப்படிப்பட்டவர்கள் பிறரை ஆசீர்வதிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார்கள். இருப்பினும், இந்த வகையான அன்பு இல்லாதவர்கள் பொதுவாக தங்கள் வாழ்க்கையை கொந்தளிப்பால் நிரப்புகிறார்கள். ஆனால் இது தேவனுடைய ஜனங்களின் ஒரு அடையாளமான பண்பாக இருக்கும்.




**Jesus is the vine, and we are to bear fruit.**

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார்." (வசனம் 35)

## வழியும், சத்தியமும் ஜீவனும்

இயேசு ஆறுதலளிக்கும் பிரசங்கத்தைத் தொடர்ந்தபோது, தம்முடைய சீஷர்களுக்கு ஒரு இடத்தை ஆயத்தம் செய்வதைப் பற்றி பேசினார். "நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." (யோவான் 14:3) அவர் எங்கு செல்கிறார் என்று தோமாவுக்கு தெரியவில்லை. அப்படியானால் அவர்களுக்கு எப்படி வழி தெரியும் என்று கேட்டனர். அதற்கு இயேசு "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." என்று பதிலளித்தார். (வசனம் 6)

இயேசு பிதாவிடம் போகிறார், அவர்கள் ஒரு நாள் அவரைப் பின்செல்லுவார்கள். சீஷர்கள் இன்னும் குழப்பத்தில் இருந்தார்கள். ஆனால் இயேசு விசுவாசத்தைப் பற்றி பேசுகிறார் என்பதையும், இயேசுவின் பலியில் உள்ள விசுவாசமே பிதாவினிடத்திற்கு செல்லும் வழி என்பதையும் அவர்கள் விரைவில் அறிந்து கொள்வார்கள். அவர்களின் பயணம், நற்குணங்களை வளர்க்கும் அனுபவங்கள் நிறைந்த நீண்ட பாதையாக இருக்கும். அவர்களின் விசுவாசம் மற்றும் பலியின் ஜீவியத்திற்கு அழியாமையும், தேவனுடைய சமூகத்தில் வசிப்பதற்கான சிலாக்கியமும் பரிசாக அளிக்கப்படும். இந்த நம்பிக்கை வரவிருக்கும் இருண்ட நாட்களில் அவர்களின் வைராக்கியத்தையும் பக்தியையும் ஊக்குவிக்கும்.

## பிதாவை எங்களுக்கு காண்பியும்

ஒரு குறிப்பிடத்தக்க அறிக்கையில், "என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள், இது முதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார்."(யோவான் 14 :7) அதற்கு பிலிப்பு, "பிதாவை எங்களுக்கு காண்பியும். அது எங்களுக்குப் போதும்" என்றார். இயேசுவின் வார்த்தைகளை இன்னும் பிலிப்பு புரிந்துகொள்ளவில்லை என்பதை அவருடைய வேண்டுகோள் வெளிப்படுத்தியது. தனக்கும் தந்தைக்கும் இடையே உள்ள இருதயம் மற்றும் மனதின் மாறாத ஒற்றுமையை ஆண்டவரின் அர்த்தமுள்ள பதில் விவரிக்கிறது.

அவருடைய செயல்களை கவனித்து, இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டபோது, சீஷர்கள் தேவனுடைய தன்மையைக் கண்டும், கேட்டும் கொண்டிருந்தனர். "நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை, என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்."(வசனம் 10) என்று இயேசு கூறினார்.

ஒவ்வொரு விசுவாசியும் தங்கள் வார்த்தைகள், நடத்தைகள், தாங்கள் வழிபடுபவரின் குணத்தை பிரதிபலிப்பதற்கு, அவரைத் தங்கள் இருதயங்களில் குடியமர்துவதற்கும் இது ஒரு வல்லமையுள்ள பாடமாகும். தாம் அடிக்கடி செயலாற்றும் வல்லமையை ஒரு நாள் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு பகிர்ந்து கொடுப்பார் என்று கூறினார். "நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்,

இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்." (வசனம் 12) இயேசு நோயுற்றவர்களைக் குணப்படுத்தினார், குருடர்களின் கண்களைத் திறந்தார், மரித்தவர்களை உயிர்ப்பித்தார். இதை காட்டிலும் பெரிய வேலைகளை சீஷர்களால் எப்படி செய்ய முடியும் ? இரண்டு விதமான பதில்களை காணலாம்.

இராஜ்யம் முழுமையாக நிறுவப்படும் போது, அந்த வேலையின் அளவு உலகளாவியதாக இருக்கும். ஒரு சிலரை மட்டும் எழுப்புவதற்கு பதிலாக, அல்லது ஒருவரை இங்கும், ஒருவரை அங்கும் குணப்படுத்துவதற்குப் பதிலாக, மரணத்தின் இருண்ட கல்லறையிலிருந்து மனுக்குலத்தின் பில்லியன் கணக்கானவர்களை எழுப்புவதில் ஆண்டவரின் உண்மையுள்ள சீஷர்களுக்கும் பங்கு இருக்கும்.

மிக பெரிய வேலைகளைச் செய்வது நிரந்தரமான பலனைத் தரும். இயேசு செய்த அற்புதங்கள் மிகவும் குறுகிய காலத்திற்கானதாக இருந்தது. உயிர்த்தெழுப்பப்பட்டவர்கள் இறுதியில் மீண்டும் மரித்தார்கள். ஆனால் இராஜ்யம் நித்திய ஜீவனைக் கொண்டுவரும்.

"இவைகளைவிடப் பெரிய காரியங்களை" என்ற சில எளிய வார்த்தைகளினால் இயேசு தம் சீஷர்களுக்கு ஒரு ஊக்கமளிக்கும் நம்பிக்கையை வைத்தார்.

## மற்றொரு தேற்றரவாளன்

இயேசு ஏழைகளுடன் பழகும் விதத்தை பார்ப்பது சீஷர்களுக்கு ஆறுதலான அனுபவமாக இருந்திருக்கும். இவ்வுலகில் மனிதர்களுக்கு அந்தஸ்து இருந்தபோதிலும் அவர்களின் மதிப்பைப் பார்ப்பதற்கான நடை முறைப் பாடமாக இது இருந்தது. ஆனால் இயேசு அங்கிருந்து செல்லவேண்டியதாக இருந்தது, தம்மைப் பின்பற்றியவர்களைக் குழப்பத்தில் விட்டு, சிறிது காலம் காணாமல் போனார். "வேறொரு தேற்றரவாளனை" அனுப்பும்படி தகப்பனிடம் கேட்பதாகச் சொல்லி அவர்களைச் சமாதானப்படுத்தினார். அவர் அதை "சத்திய ஆவி" என்று அழைத்தார். (வசனம் 17) தேற்றரவாளன் என்பது உண்மையின் அடிப்படையில் பெரும்பாலும் புரிந்து கொள்ளப்படுவதில்லை. ஆனால் இயேசு தேவன் மற்றும் அவருடைய திட்டத்தைப் பற்றிய குறிப்பிட்ட சத்தியத்தை குறிப்பிட்டார். இந்த வழிகளில் அதிகமான புரிதல் ஆறுதலைத் தருகிறது. இன்று தேவனுடைய திட்டத்தை இன்னும் விரிவாகப் புரிந்துகொள்ளும் பாக்கியம் நமக்குக் கிடைத்துள்ளது, மேலும் மரணம் நம் வாழ்வின் முடிவு அல்ல என்ற நம்பிக்கையை அது அளிக்கிறது.

யுத்தங்களினால் பாதிக்கப்பட்டு களைத்துப்போயிருக்கும் உலகத்திற்கு தேவனுடைய இராஜ்யம் அமைதியைக் கொண்டுவரும் என்பதை அறிந்து, மகிழ்ச்சி

நிறைந்த எதிர்காலத்தை அது சுட்டிக்காட்டுகிறது. தேவனுடைய சத்தியம், அவருடைய சிருஷ்டிப்புகள் அனைத்தின் மீதும் அவர் கொண்டுள்ள ஆழமான அன்பை நன்கு புரிந்துகொள்ள உதவுகிறது.

நாம் மற்ற செல்வாக்குகளால் அசைக்கப்பட கூடாத படிக்கு, இத்தகைய அறிவு அவர் மீது நமக்குள்ள நம்பிக்கையைப் பலப்படுத்த வேண்டும். தேவனுடைய நம்பிக்கையான செயல்பாடுகளை நம்புவது உலகத்தால் புரிந்துகொள்ள முடியாத அல்லது அனுபவிக்க முடியாத ஒரு இருதய நிறைவான அமைதியைக் கொண்டுவருகிறது. "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன், உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (வசனம் 27) உண்மையான வளர்ச்சி அடைந்த சீஷர்கள், தேவனுடைய ஆவியின் விளைவு அவர்களை கிறிஸ்துவைப் போல ஆக்குகிறது.

### மெய்யான திராட்சை செடி

மேல் வீட்டு அறையை விட்டு வெளியேறிய பிறகு, இயேசு தம் சீஷர்களோடு கெத்சமனேக்கு மெதுவாக நடந்து செல்லும்போது தொடர்ந்து பேசினார். அவர் தன்னையே ஒரு மெய்யான திராட்சைக் செடி என்றும் அவர்களை கொடிகள் என்று விவரித்தார். ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவர்கள் திராட்சைச் செடியில் நிலைத்திருப்பது அவசியம் என்று கூறினார். ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு பயனுள்ள பிரதிபலிப்பு என்னவென்றால், "நான் அவரில் நிலைத்திருக்கிறேனா?" என்றும், இயேசுவின் வாழ்க்கை மற்றும் போதனைகள் என் வாழ்க்கையில் ஊடுருவ நான் அனுமதிக்கிறேனா ? ஒருவரையொருவர் பலப்படுத்துவதற்காக நான் மற்ற கொடிகளுடன் நேரத்தை செலவிடுகிறேனா ? என்ற கேள்வியை கேட்கவேண்டும்.

இந்த நடைமுறைக் கேள்விகள் கிறிஸ்துவில் நமது வளர்ச்சியை மதிப்பிடவும், மேலும் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை முறையை ஊக்குவிக்கவும் உதவுகிறது. தம்மைப் பின்பற்றுவதற்காக அவர்கள் எடுக்கும் முயற்சிகள் ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் என்று இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு உறுதியளித்தார். "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்." (யோவான்15:11)

பின்னர் அவர் அந்த பெரிய கட்டளையை மீண்டும் கூறினார். "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை."(12,13 வசனங்கள்)

திராட்சை செடியுடன் கொடி இணைந்திருந்தால் மட்டுமே, கொடிகள் ஆர்வத்துடனும், அன்புடனும் ஊழியம் செய்யும். அப்பொழுது கொடிகள் செழித்து வளரும் என்பது இயேசு வெளிப்படுத்திய வல்லமைமிக்க பாடமாகும்.

## நான் போகவேண்டும்

இயேசுவின் மறைவு சீஷர்களை சோகத்தில் ஆழ்த்தியது. (யோவான்16:6) இயேசு அவர்களின் துக்கத்தை பிரசவ வேதனையில் இருக்கும் ஒரு பெண்ணுடன் ஒப்பிடுகிறார். பிறந்தவுடன் பிரசவ வலிகள் முடிந்து, புதிய வாழ்வின் மகிழ்ச்சிஅதை மாற்றிவிடும். அவர்களின் புதிய ஆவிக்குரிய வாழ்க்கை தொடங்கும் போது, அவர்களின் துயரம் ஒரு நினைவாக மாறும். அவர்கள் சார்பாக தம்முடைய மீட்கும் பொருளின் புண்ணியத்தை அவர்களுக்கு வழங்கி, அதனால் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுகொள்வதற்காக அவர் செல்லவேண்டியது அவர்களுக்கு சாதகமாக இருக்கும். இதற்கான நன்மைகள் கண்ணுக்கு தெரியாதவை, ஆனால் உண்மையானவை, அவர்களின் வாழ்க்கையையும் தேவனுடைய ஜனங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் களின் வாழ்க்கையும் மாறும்.

## இயேசுவின் முடிவு ஜெபம்

சீஷர்களிடம் அவருடைய தனிப்பட்ட கருத்துகளைச் சொன்ன பிறகு, இயேசு வானத்தை நோக்கிப் பார்த்து ஜெபித்தார். இது வரை அவர் அனுப்பப்பட்ட வேலையைச் செய்து தந்தையை மகிமைப்படுத்தினார்.

அவர் தனது தந்தையுடன் மீண்டும் ஒன்றிணைவதற்கும், அவர் முன்னதாக பெற்ற மகிமையை மீண்டும் கொடுக்கும்படி கேட்டார். தம்முடைய சீஷர்களின் மகிழ்ச்சி நிறைவாக இருக்கவும், அவர்கள் உண்மையுள்ளவர்களாக நிருபிக்கப்படவும் இயேசு அவர்களுக்காக ஜெபித்தார். "நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர் களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். " (யோவான்17:20,21)

எதிர்காலத்தில் பிரச்சனைகள், துன்புறுத்தல்கள் மற்றும் பிளவுகள் ஏற்படும் என்பதை அறிந்த இயேசு, பரிசுத்தவான்கள் ஒன்றுபட்டு ஒருவருக்கொருவர் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் என்ற ஆழ்ந்த விருப்பத்தை வெளிப்படுத்தினார். "நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும் படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன், இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்." (வசனம்26)

இயேசு தம் ஜெபத்தை முடித்தவுடன், சிறு கூட்டம் ஒன்று சேர்ந்து, கெதரோன் ஆற்றைக் கடந்து, கெத்சமனே தோட்டத்திற்குள் நுழைந்தது. நம்முடைய ஆண்டவரின் வாழ்க்கையின் கடைசி காட்சிகள் இந்த அமைதியான தோட்டத்தில் தொடங்கியது. ஆனால் தம் சீஷர்களுக்கு ஆண்டவரின் செய்தி அவர்களின் இருதயங்களில் பொக்கிஷமாக இருந்திருக்கும், மேலும் ஒரு நாள் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும் அனைவரிடமும், சுமார் 2000 ஆண்டுகளுக்குப் பிறகு, அவருடைய வார்த்தைகள் தொடர்ந்து நம் இருதயங்களை ஆறுதலுடனும் நம்பிக்கையுடனும் நிரப்புகின்றன.

## இன்றைய தீர்க்கதரிசனம்
# செயற்கை நுண்ணறிவு

"கர்த்தர் ஞானத்தைத் தருகிறார், அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" (நீதிமொழிகள் 2:6)

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிவியல் புனைக்கதைகள் செயற்கையாக அறிவார்ந்த ரோபோக்கள் மீது ஒரு மோகத்தை உருவாக்கியது. கணினி தொழில் நுட்பம் முன்னேறியதால், செயற்கை நுண்ணறிவு (AI-Artificial Intelligence) என்ற சொல் 1956 ஆம் ஆண்டில் அமெரிக்க கணினி விஞ்ஞானி ஜான் மெக்கார்த்தி தோற்றுவித்தார், அவர் அதை "நுண்ணறிவை கொண்டு மனிதர் செய்யும் காரியங்களை, ஒரு கணினி செய்தல்" என்று வரையறுத்தார். இன்று AI என்பது ஆன்லைனில் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்வது அல்லது சதுரங்கம் விளையாடுவது போன்ற மனித உள்ளீடு தேவைப்படும் சிக்கலான பணிகளைச் செய்யும் பயன்பாடுகளுக்கான ஒரு கவர்ச்சியான சொல்லாக மாறியுள்ளது. அன்றாட வாழ்வில், நம் வீட்டில் அழுக்கை துடைத்து அலையும் வாக்யூம் கிளீனரில் இருந்து, சுயமாக பார்க்கிங் மற்றும் சுயமாக ஓட்டும் கார்கள் வரை அனைத்தும் இருக்கலாம். கணினி உலகில், AI இன் குறிப்பிட்ட பயன்பாடுகளில் நிபுணர் அமைப்புகள், மொழி செயலாக்கம், பேச்சு மற்றும் முக அங்கீகாரம் ஆகியவை அடங்கும்.

1950 களின் பிற்பகுதியிலிருந்து 1970 களின் முற்பகுதி வரை, இயந்திர கற்றல் வழிமுறைகள் (எதிர்பார்க்கப்பட்ட தரவின் உள்ளீட்டின் அடிப்படையில், சிக்கல்களைத் தீர்க்க அல்லது பணிகளைச் செய்யப் பயன்படுத்தப்படும்) சிக்கல்களைத் தீர்க்க அல்லது பணிகளைச் செய்யப் பயன்படுத்தப்படும் நிலையான வழிமுறைகளின் பட்டியல்) மேம்பட்டது மற்றும் பயனர்கள் அவற்றைப் பயன்படுத்துவதில் அதிக தேர்ச்சி பெற்றனர். ஸ்மார்ட்போன்கள், வழி செலுத்தல் அமைப்புகள், பயணம், எடிட்டிங், தேடுபொறிகள், டிஜிட்டல் உதவியாளர்கள் மற்றும் சுய - ஓட்டுநர் கார்கள் உலகின் பெரும்பகுதியை AI இன் புதிய நிலைக்கு கொண்டு சென்றுள்ளன. வாடிக்கையாளர்களுடன் தொடர்பில்லாத 26,000 ஊழியர்களில் மூன்றில் ஒரு பங்கை நீக்கி, அவர்களுக்குப் பதிலாக AI ஐ பயன்படுத்துவோம் என்று ஐபிஎம் நிறுவனம் சமீபத்தில் அறிவித்தது. பாதுகாப்பு ஆய்வாளர்கள் இப்போது AI சந்தை ஆண்டுதோறும் 54 சதவீதம் வளரும் என்று கணித்துள்ளனர்.

ஏப்ரல் 2023 இல் அமெரிக்காவின் எழுத்தாளர் சங்கம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டபோது, தொலைக்காட்சி மற்றும் திரைப்படப் பொருட்களை உருவாக்குவதற்கும், எழுதுவதற்கும் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த ஸ்டுடியோக்களுக்கு ஒரு கோரிக்கை விடுத்தார்கள். 2022 இல், மனிதனைப் போன்ற உரையாடல்களை நடத்தும் இயற்கையான மொழி செயலாக்கக் கருவியான ChatGPTஇன் வெளியீடு AI ஐ, ஒரு சர்ச்சைக்கு கொண்டு வந்தது. இது வெளியானவுடன் ஹேக்கர்கள் அதன் பாதுகாப்புகளை மீற முயன்றனர். நியூஸ்கார்ட் என்ற ஒரு கண்காணிப்பு அமைப்பு, தவறான தகவலை அங்கீகரிக்கும் போது, 80

சதவீகிதம் அது பிழையான முடிவுகளை உருவாக்கியது என்று கண்டறிந்தது. எனவே AIஇன் ஒரு பெரிய ஆபத்து தவறான தகவலை அங்கீகரிக்காமலிருப்பது. (இதுதான் ஏவாளை ஏமாற்றியது)தயாரிப்பாளரான ஓபன் எஐ நிறுவனம், (OpenAI) கூகிள் மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனங்களுடன் இணைந்து, அதன் பயன்பாட்டிற்கான வரம்புகளைத் தீர்மானிக்க இப்போது அரசாங்க நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கிறது. சமீபத்திய அசோசியேட்டட் பிரஸ் கட்டுரை இதை இவ்வாறு சுருக்கமாகக் கூறியுள்ளது? சாட் போட்கள் "தகவலை இட்டுக்கட்டி அதை உண்மையென உறுதியுடன் முன்வைக்கும்" போக்கைக் கொண்டுள்ளது. மனிதக் குடும்பம் AI ஐ நம்பத் தொடங்கியவுடன் சாத்தான் அவர்களை தவறாக வழிநடத்த இது மற்றொரு வழியாக இருக்கலாம்.

**பயப்பட தேவை உண்டா?**

ஆராய்ச்சி ஆய்வாளர் ஜோஷ் பேர்சின் "ஏன் மக்கள் AI பற்றி பயப்படுகிறார்கள் ? " என்ற கேள்விக்கு ஒரு ஏப்ரல் கட்டுரையில் பதிலளித்தார். " AI அமைப்புகள் நியாயமற்ற சிறைவாசம், ஸ்பாம் மற்றும் தவறான தகவல், சைபர் - பாதுகாப்பு பேரழிவுகள் மற்றும் இறுதியில் மின் உற்பத்தி நிலையங்கள், தகவல் அமைப்புகள், மருத்துவமனைகள் மற்றும் பிற நிறுவனங்களை கையகப்படுத்தும் ஒரு "ஸ்மார்ட் மற்றும் திட்டமிடல், " AI ஆக மாறும் என ஜனங்கள் கவலைப்படுகிறார்கள். "பல கணினி அறிவியலாளர்கள், மனிதனின் பிரச்சனைகளைத் தீர்க்கும் திறனுக்கு AI மாற்றாக இருக்க முடியாது என்று கூறுகின்றனர், மற்றவர்கள் குறிப்பாக மனித ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுத் துறையில், AI ஆனது ஆரோக்கியத்தை நிர்ணயிப்பவர்களின் மனித விளக்கத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது என்று கவலை தெரிவிக்கின்றனர். (bmj.com)

புதிய தொழில் நுட்பத்தில் விரைவாக ஆர்வம் காட்டும் முதலீட்டாளர்கள், AI க்கு தொடர்ந்து பணத்தை வெகுவாக செலவழிக்கிறார்கள். வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல்(Wall Street Journal) மே மாத்தில் பங்கு செயல் திறனை வெளியிட்டது, இது மே மாதத்தின் முதல் பகுதி வரை 2023 ஆம் ஆண்டிற்கான ஸ்டாண்டர்டு அண்ட் புவர்ஸ் (Standard and Poors)500 இல் AI பங்குகள் அனைத்து ஆதாயங்களையும் பெற்றுள்ளது என்பதைக் காட்டுகிறது.

ஜெனரேடிவ் AI எனப்படும் புதிய பகுதி, அதன் ஆரம்பகாலத்தில் உள்ளது, அசல் யோசனைகளை உரை, வீடியோ அல்லது பிற ஊடகங்கள் வடிவில் "சிந்திக்க" முடியும் செயற்கை நுண்ணறிவு வடிவத்தை உறுதியளிக்கிறது.

புதிய மாதிரிகள் பில்லியன் கணக்கான பக்க உரைகளில் "பயிற்சி" பெறும் வல்லமையை பெற்றுள்ளது மற்றும் தனிப்பட்ட வாக்கியங்களில் மாத்திரம் இல்லாமல் பக்கங்கள், அத்தியாயங்கள் மற்றும் புத்தகங்களில் உள்ள சொற்களுக்கு இடையே உள்ள தொடர்பைக் கண்காணிக்க முடியும். டிரான்ஸ்ஃபார்மர்கள் என அழைக்கப்படும் அவை, குறியீடு, புரதங்கள், இரசாயனங்கள் மற்றும் டிஎன்ஏவை பகுப்பாய்வு செய்ய இணைப்புகளைக் கண்காணிக்க முடியும். சில பொறியாளர்கள் மற்றும் கணினி விஞ்ஞானிகள் இது போன்ற AI தொழில் நுட்பத்தின் முன்னேற்றங்கள் இறுதியில் மரண

பிரச்சனையை தீர்க்கும் என்று நம்புகிறார்கள். ஹூமானிட்டி +என்ற அமைப்பின் இணை நிறுவனர் டேவிட் பியர்ஸ் இவ்வாறு எழுதுகிறார், "நாம் சொர்க்கத்தில் வாழ விரும்பினால், அதை நாமே உண்டாக்க வேண்டும். நாம் நித்திய ஜீவனை விரும்பினால், பிழைகள் நிறைந்த நமது மரபணுக் குறியீட்டை மீண்டும் எழுதி, தேவனைப் போல் ஆக வேண்டும்.. உயர்த்தொழில் நுட்ப தீர்வுகள் மட்டுமே வாழும் உலகில் இருந்து துன்பத்தை ஒழிக்க முடியும். ஆசிரியர் ரே குர்ஸ்வீல், தி ஏஜ் ஆஃப் ஸ்பிரிச்சுவல் மெஷின்ஸில் ()என்ற புத்தகத்தில், இவ்வாறு எழுதுகிறார், தற்போதைய நூற்றாண்டில், மனிதன் தனது மூளையை ஒரு கணினியில் பதிவேற்ற முடியும் மற்றும் ஒரு மெய்நிகர் சூழலில், மரிக்கும் உடல்களின் வரம்பு இல்லாமல் எப்போதும் வாழ முடியும்.

## AI, மனிதன் மற்றும் தேவன்

"பின்பு தேவன் - நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக, அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றர். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." (ஆதியாகமம் 1: 26, 27)

தேவன் யோபிடம் ஒரு கடினமான கேள்வியைக் கேட்டார் - "அந்தக்கரணங்களில் ஞானத்தை வைத்தவர் யார்? உள்ளத்தில் புத்தியைக் கொடுத்தவர் யார் ? "(யோபு 38: 36) மனிதனால் தெரிந்ததிலிருந்து தெரியாதது வரை குறைந்த பட்சம் பகுத்தறிவு செய்ய முடிகிறது. சில விஷயங்கள் சரி. மற்றவை தவறு என்று அவனுக்கு தெரியும். தவறு செய்யும் போது குத்தப்படும் மனசாட்சியும், சரியானது செய்யும் போது மன அமைதியும் அவனுக்கு உண்டு. ஆயிரமாண்டு இராஜ்யத்தில் தொழில் நுட்பத்தின் முன்னேற்றம் என்ன பங்கு வகிக்கும் என்று நமக்குத் தெரியாத நிலையில், மனிதன் மட்டுமே தேவனின் சாயலைத் தாங்குகிறான் என்று நாம் உறுதியாக சொல்லலாம். எந்த செயற்கை நுண்ணறிவும் மனிதனை பாவத்திலிருந்து மீட்கவோ, அதன் விளைவுகளை அழிக்கவோ முடியாது என்பதும் உறுதி. உயிர்த்தெழுந்த கோடிக் கணக்கானோருக்குக் கற்பிப்பதிலும் நியாயந்தீர்ப் பதிலும் தேவன் எந்த வழியைப் பயன்படுத்துவாரோ, அவர் மட்டுமே நீதியின் வழியைக் கற்றுக் கொள்வதற்கான வெகுமதியாக நித்திய ஜீவனை வழங்க முடியும் (ஏசாயா26:9)

தேவனின் புத்தியுள்ள சிருஷ்டிகள் தெய்வீக சட்டத்திற்குக் கீழ்ப்படிவது அவசியம், ஆனால் கீழ்ப்படிதல் சுயாதீனமாக வழங்கப்பட வேண்டும். ஆதாமும் ஏவாளும் இயந்திரங்கள் அல்ல, ஆனால் தேவனின் சாயலில் உருவாக்கப்பட்ட புத்திக்கூர்மையுள்ள சிருஷ்டிகள். அவருடைய சட்டத்திற்குக் கீழ்ப்படியும்படி மனிதர்களை வற்புறுத்துவது சிருஷ்டிகரின் வடிவமைப்பிற்கு முரணானது. அவர்கள் தங்கள் சொந்த விருப்பத்தின் படியே கீழ்ப்படிய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். (ஆதியாகமம் 1:27-30) தேவன் கொடுத்த இந்த சுதந்திரத்தைப் பயன்படுத்துவதில், சாத்தானின் சோதனையால், அவர்கள் தேவனின்

அறிவுறுத்தல்களுக்கு மாறாக ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்தனர். அவர்களுக்கு முன் எச்சரிக்கப்பட்ட படியே மரண தண்டனை அவர்களுக்கு கிடைத்தது. "சாகவே சாவாய்" என்று தேவன் ஆதாமிற்கு கூறியிருந்தார். (ஆதியாகமம் 2:17) ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டார்கள் "மேலும்" ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறார்கள்".(ரோமர் 5: 19, 1கொரிந்தியர் 15: 22) என்று பவுல் எழுதுகிறார், இவ்வாறு மரணம் மனித அனுபவத்திற்கு அறிமுகமானது. பரம்பரை மூலம், மரணம் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு அனுப்பப்பட்டது, மேலும், அனைத்து நோய்களும் வலிகளும் இறுதியில் கல்லறைக்கு இட்டுச் செல்கின்றன. எந்தவொரு செயற்கை நுண்ணறிவும் கீழ்ப்படியாமை மற்றும் மரணத்தின் விளைவுகளை மாற்ற முடியாது.

பாவத்தின் பயங்கரமான விளைவுகளை அனுபவிப்பதன் மூலம் கற்றுக்கொள்ள, தேவன் உலகத்தில் பாவம் நுழைய அனுமதித்தார்."பின்பு தேவனாகிய கர்த்தர்" - இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான், (ஆதியாகமம் 3: 22) இங்குள்ள "நம்மில்" என்பது ஆதியாகமம் 1:26 இல் உள்ளதைப் போன்றது, யெகோவா மற்றும் தனது பரலோகத் தந்தையுடன் அனைத்து படைப்பு வேலைகளிலும் ஒத்துழைத்த லோகாஸ் அல்லது "வார்த்தை" (யோவான் 1: 3). உலக மீட்பராகிய இயேசுவாகப் பிறக்க பரலோகத்தை விட்டுக்கொடுத்தவர் லோகாஸ் (பிலிப்பியர் 2:5-8)

ஆதாமின் முழு சந்ததியும் அவர் பாவம் செய்தபோது கண்டனம் செய்யப்பட்டது. தம்முடைய சொந்த பரிபூரண இனத்தை உருவாக்கும் திறனைக் கொண்டிருந்தும், இயேசு அதற்குப் பதிலாக ஆதாமின் இடத்தில் அதற்குரிய விலையாக மரித்தார். (1தீமோத்தேயு 2:5-6) தம்முடைய மரணத்தின் மூலம், இயேசு முழு மனித இனத்தையும் வாங்கினார், அவர்களுடைய கல்லறைகளிலிருந்து எழுப்பி, அவர்களுக்கு நீதியைப் போதிக்க முழு அதிகாரத்தை பெற்றார், அவர்களை நித்திய ஜீவனுக்கு மீட்டெடுப்பதாக வாக்குறுதி அளித்தார். (யோவான் 5:28, 29) இந்த சுவிசேஷ யுகத்தில், ஒரு சிலர் மட்டுமே மீட்பரை ஏற்றுக் கொண்டனர், ஒரே ஆவிக்குரிய தளத்தில் தெய்வீக வாழ்க்கையின் வாக்குறுதியை "புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை"புரிந்து கொண்டனர் (எபிரெயர் 10:19-21) ஆயிர வருட யுகத்தின் போது, புதிய உடன்படிக்கையின் கீழ் (எரேமியா31:31-34) எஞ்சியிருக்கும் மனுக்குலம் தேவனின் உண்மையான நோக்கத்தைக் கற்று, நித்திய ஜீவனுக்குப் போகும் பாதையில் இயேசுவைப் பின்பற்றும் வாய்ப்பைப் பெறுவார்கள். "அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும், அது பரிசுத்த வழி என்னப்படும், தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை. அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை" (ஏசாயா35: 8) இன்று மனிதனின் அற்புதமான செயல்களை நாம் கருத்தில் கொள்ளும் போது, உலகிற்கு நித்திய ஜீவனையும் மகிழ்ச்சியையும் கொண்டு வர யெகோவா தேவனால் மட்டுமே முடியும், அவருக்கு மாத்திரமே அந்த வல்லமை உள்ளது என்பதை எப்போதும் நினைவில் கொள்வோம். (ஏசாயா51:11)

Pastoral Bible Institute
P.O. Box 3274
Bremerton, WA 98310

Non-Profit Org.
U.S. Postage
PAID
Addison, IL
Permit No. 109



## Light of the World

Light of the world, shine on our souls;
Thy grace to us afford;
And while we meet to learn thy truth,
Be thou our teacher, Lord.

As once thou didst thy word expound
To those who walked with thee,
So teach us, Lord, to understand,
And its blest fulness see—

Its richness, sweetness, pow'r and depth,
Its holiness discern;
Its joyful news of saving grace
By blest experience learn.

Help us each other to assist;
Thy spirit now impart;
Keep humble, but with love inspire,
To thee and thine, each heart.

Thus may thy Word be dearer still,
And studied more each day;
And as it richly dwells within,
Thyself in it display.